பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 30 வியாழக்கிழமை (14.07.2005)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :230

# புலிகளின் சகல பணிமனைகளும் கிழக்கில் திடீரென மூடப்பட்டன

## போராளிகளும் விலக்கப்படுகின்றனர் பதற்ற நிலைமை தொடர்ந்தும் நீடிப்பு

கொழும்பு,ஜூலை 14

**கிழக்கிலங்கையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்களுக்கு மத்தியில் அங்கு பதற்ற நிலைமை தொடர்கின்றது. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள தமது அரசியல் செயலகங்கள், பொதுமக்களுடன் தொடர்புபடும் அலுவலகங்கள், தங்கு மிடங்கள் போன்றவற்றை மூடி அவற்றிலிருந்து தமது உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் அமைப்பு விலக்கத் தொடங்கியிருக்கின்றது.**

திருகோணமலையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள புலிகளின் அலுவலகங்கள் ஏற்கனவே நேற்று மூடப்பட்டுக் கிடந்தன.

அந்தக் கருமபீடங்களில் 'கடமையாற்றியோர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சம்பூருக்குச் சென்றுவிட்டனர் என ஒரு தகவல் தெரிவித்தது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள புலிகளின் அலுவலங்கள், பொது நிலையங்கள் போன்றவற்றிலிருந்து புலிகளின் உறுப்பினர்கள் இன்று விலக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மீள அழைக்கப்படுவார்களா அல்லது அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பகிரங்கமாகத் தெரியாத இடங்

(2ஆம் பக்கம் பார்க்க)

### படையினர் மீது மூதூரில் தாக்குதல் பத்துப்பேர் படுகாயம்!

மூதூர்,ஜூலை14

படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூர் பாலத்தோப்பூர் பகுதியில் டிராக்டரில் சென்ற படையினர்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அதிகாரி உட்பட பத்துப்ப [illegible] யினர் படுகாயமடைந்தனர்.

நேற்றிரவு 8.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பாலத்தோப்பூர் முகாமில் இரவு உணவை முடித்துக்கொண்ட படையினர் டிராக்டரில் பன்சலவத்த என்ற இடம்நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர் என்றும் -

அப்போது இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது என்றும் - கூறப்பட்டது.

படுகாயமடைந்த படையினர் முதலில் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (எ)

### பொதுக்கட்டமைப்பு ஊடாக விடுதலைப் புலிகளுக்கு நிதியா? சட்டவிரோதமென்கிறது ஜே.வி.பி.

பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி வழங்குவது தொடர்பான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், பொதுக் கட்டமைப்பின் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்குவது சட்டவிரோதமானதென்று ஜே.வி.பி. நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்தது.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுக் காலை செய்தியாளர் மாநாடொன்றை நடத்திய ஜே.வி.பி. பொதுக்கட்டமைப்பிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு தனக்குச் சாதாகமாகக் கிடைக்குமென்றும் நம்பிக்கை வெளியிட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## காலக்கெடு இன்று முடிவு

### புலிகளின் நடவடிக்கை கடுமையாக இருக்கும்?

கொழும்பு,ஜூலை14

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு திட்டவட்டமான முடிவை அறிவிக்க இலங்கை அரசுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வழங்கிய இரண்டு வாரக் காலக்கெடு இன்று முடிவடைகிறது.

தமது கோரிக்கைக்கு அரசிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காத நிலையில் - அரசின் பதில் குறித்து அதிருப்தி தெரிவித்திருக்கும் புலிகள் - இது விடயத்தில் கடுமையான பிரதிபலிப்பை விடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர் இவ்விடயத்தில் புலிகளின் நிலைப்பாடு குறித்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு இதனை வெளியிட்டார்.

அவர் கூறியதாவது:-

தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப்பேசினோம். புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் இச்சந்திப்பில் உடனிருந்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கோரி இருபது லட்சம் பேரின் ஒப்பம் சேகரிப்பு

### வீடு, வீடாகச் செல்ல ஐ.தே.கட்சி முஸ்தீபு

ஜனாதிபதித் தேர்தலை உரிய திகதியில் நடத்தக்கோரி இருபது லட்சம் பேரிடம் கையெழுத்துப் பெற்று அந்த மனுவைத் தேர்தல் ஆணையாளரிடம் கையளிப்பதற்கும், வீடு வீடாகச் சென்று மக்களிடம் இதுபற்றி விளக்குவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

நேற்றுக்காலை ஐ.தே.கட்சியின் அரசியல் குழு கூடி இந்த முடிவை எடுத்திருப்பதாக அக்கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

நாட்டைச் சுற்றி ('ரட்ட வட்டா') என்ற தலைப்பில் நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளோம். கிராம மட்டத்தில் உள்ள ஐ.

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் அசம்பாவிதங்கள் மக்கள் மத்தியில் பீதி; பதற்றம்!

### நேற்றும் படையினர் மீது கிரனேட் தாக்குதல்கள்

திருகோணமலை,ஜூலை14

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் பிற்பகலில் ஆரம்பமான வன்முறைகள் நேற்றும் தொடர்ந்தன. பாலையூற்றுப் பகுதியில் காவல் கடமையில் நின்ற இராணுவத்தினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.

கடந்த ஞாயிறன்று செல்வநாயகபுரத்தில் போராளிகள் இருவர் உட்பட நால்வர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்றுமுன்தினம் திருகோணமலையில் முழு அளவிலான அடைப்பு கடைப்பிடிக்கப்பட்டது. அதேசமயத்தில் நகரை அண்டிய பகுதிகளில் ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

3ஆம் கட்டை, அலஸ்தோட்டம் பகுதியில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற கிரனேட் வீச்சில் 13 பொலீஸார் காயமடைந்தனர். திருகோணமலை, அநுராதபுரம் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இராணுவச்சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

அதேசமயம் நேற்றுமுன்தினம் இரவு அநுராதபுரம் சந்திப் பகுதியில் தொடர்ந்து

(2ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமாக புத்தர்சிலையை அமைத்துவிட்டு அடிப்படை உரிமைமீறப்பட்டதாக முறையிடலாமா?

### நேற்று உயர்நீதிமன்றில் நீதியரசர் கேள்வி

கொழும்பு , ஜூலை 14

"அரசகாணியில் புத்தர் சிலையை அமைத்து அதன் மூலம் சட்டவிரோத செயலைப் புரிந்துவிட்டு அது தொடர்பாக அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக நீதிமன்றில் நிவாரணம் கோரும் உரித்து யாருக்கும் உண்டா?''

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் உயர்நீதிமன்ற நீதியரசர் நிமால் காமினி அமரதுங்க.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று நேற்றுக் கொழும்பில் உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஷிரானி திலகவர்த்தனா, நிமால் காமினி அமரதுங்க, சலிம் மர்சூக் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போதே இந்தக் கேள்வியை நீதியரசர் அமரதுங்க எழுப்பினார்.

திருகோணமலை சீனக்குடா திமுதுகம ஸ்ரீ போதிராஜராம விகாரையின் விகாராதிபதி தெஹியோவிற்ற பியதிஸ்ஸ தேரர் இந்த

(2ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி மாளிகைச் சூழல்: முழுவிவரங்களும் சேகரிப்பு

கொழும்பு,ஜூலை14

ஜனாதிபதி மாளிகையை அண்டியுள்ள பகுதியில் அமைந்திருக்கும் குடியிருப்புகள், வியாபாரநிலையங்கள், அலுவலகங்கள் போன்றவற்றில் பணியாற்றுபவர்கள், தங்கியிருப்பவர்கள் என அனைத்து ஆள்களினதும் விவரங்களைத் திரட்டுவதற்குப் பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)



சஞ்சீவனின் திருவுருவப் படத்திற்கான நினைவுச்சுடரினை அவரது தந்தை சோமசுந்தரம் ஏற்றுவதை முதலாவது படத்திலும் மலர் மாலையினை அவரது தாயார் அணிவிப்பதை இரண்டாவது படத்திலும்-

யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்:- பிரபா)*

## புற்றுநோய் வைத்தியசாலை சனியன்று திறந்துவைப்பு

குருநகர்,ஜூலை14

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

உலக வங்கியின் அனுசரணையுடன் நீர்ப் திட்டத்தின்கீழ் மீள நிர்மாணிக்கப்பட்டுள்ள தெல்லிப்பழை புற்றுநோய் ஆஸ்பத்திரியையும், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையையும் அன்றைய தினம் திறந்துவைக்க வருகைதரவுள்ள வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவுடன், மாகாண சுகாதார அமைச்சின் உயர்மட்டக் குழுவும் வருகைதரவுள்ளது என யாழ். பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது. (எ-51)

## சஞ்சீவனின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை14

2000 ஆம் ஆண்டில் கொலை செய்யப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் சஞ்சீவனின் 5 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்று மாலை நல்லூரில் அமைந்துள்ள தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அலுவலகத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்விற்கு தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ்.மாவட்டப் பிரிவின் தலைவர் குனேந்திரன் தலைமை வகித்தார்.

தமிழீழத் தேசியக்கொடியினை பொது அமைப்புகள் ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் ஏற்றிவைத்தார்.

சஞ்சீவனின் திருவுருவப் படத்திற்கான நினைவுச்சுடரினை அவரது தந்தை சோமசுந்தரம் ஏற்றிவைக்க தாயார் திருமதி சோமசுந்தரம் மலர்மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன், தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் கிருஷ்ணா உட்படப் பலர் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-7-ரி)

## முத்தமிழ் விழா

குருநகர்,ஜூலை14

யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் முத்தமிழ் விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் மா.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் கல்வி வலய தமிழ்த்துறைக்குப் பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-51)

## வழங்கல் கட்டளைகள் இன்றுமுதல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை14

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் நிவாரணத்தின் 33 ஆம், 35 ஆம் புள்ளிகளுக்கான வழங்கல் கட்டளைகள் இன்றுமுதல் யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

எனவே, ப.நோ.கூ.சங்கங்கள், மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தில் அவற்றை உடனடியாகப் பெற்று எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் உலக உணவுத் திட்ட நாவற்குழி உணவுக் களஞ்சியத்திலிருந்து உணவுப்பொருள்களைப் பெற்று விநியோகத்தினை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்றும் -

எதிர்வரும் 25 ஆம் திகதியுடன் மேற்படி புள்ளிகளுக்குரிய உணவு விநியோகத்தினை நிறுத்துமாறும் யாழ்.மாவட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார்.

உரிய பயனாளிகளின் மேற்படி புள்ளிகளுக்குரிய நிவாரணத்தை காலம் தாழ்த்தாது 25.07.2005 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## திருமலையில் அசம்பாவிதங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டநேரம் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது. அலஸ் தோட்டத்தில் நடந்த தாக்குதலில் பொலீஸார் காயமடைந்ததால் ஆத்திரமடைந்த பாதுகாப்புப் படையினர் அன்புவழிபுரம், அநுராதபுரம் சந்தி ஆகிய பகுதிகளில் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதால் ஏற்பட்ட பயம் காரணமாக பலர் தமது வீதியோர இருப்பிடங்களை விட்டு உட்புறப் பகுதிகளை நோக்கி நகர்ந்தனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்றும் திருகோணமலையில் பதற்றம் நிலவியது. செவ்வாய்க்கிழமையே மாவட்டத்தில் கடை அடைப்பு கடைப்பிடிக்கப்பட்டது. எனினும் நேற்றும் பல கடைகள் திறக்கப்படவில்லை. குறிப்பாக அசம்பாவிதங் கள் இடம்பெற்ற பகுதிகளில் இந்த நிலைமை இருந்தது. அலுவலகங்கள், பாடசாலைகளில் வரவு குறைந்து காணப்பட்டது. மக்கள் ஒருவித பீதியுடனேயே காலத்தைக் கழித்து வருகின்றனர்.

நேற்று முற்பகல் 10.40 மணியளவில் அநுராதபுரம் சந்தியில், காந்தி நகரின் நகரசபை ஊழியர் விடுதி முன்பாக காவலரண் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீதே கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சிப்பாய் ஒருவருக்கு சிறுகாயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் பதற்ற நிலை மேலும் அதிகரித்தது.

அதேசமயத்தில் டவுன்ரவுன் பகுதியில் நின்றிருந்த படையினர் மீதும் கிரனேட் வீச்சு இடம்பெற்றுள்ளது. அதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

அந்தக் கிரனேட்டை வீசினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் படையினரால் மிக மிக மோசமாகத் தாக்கப்பட்டார் என்று கூறப்பட்டது.

திருகோணமலை, ஆலங்கேணியில் உள்ள சூரங்கல் இராணுவ முகாம் மீது அதிகாலை 1.30 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை மூதூர் ஆலிம் நகரில் உள்ள பகுதியிலும் கிரனேட் தாக்குதல் ஒன்று இடம்பெற்றது என்றும் -

அதில் இராணுவச் சிப்பாய்கள் மூவரும், அருகிலிருந்து வீட்டைச் சேர்ந்த சிறுமி ஒருத் தியும் காயமடைந்தனர் என்றும் -

அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறின. இதனால் மூதூரிலும் பெரும் பதற்றம் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காயமுற்ற சிறுமி கடற்படைப் படகு மூலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.(எ-க)

## அல் -கெய்டா இயக்கத்துடன் புலிகளுக்குத் தொடர்பாம்!

### கதை அளக்கிறது ஹெல உறுமய

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், அல்-கெய்டா இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகவும், பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தில் மேற்குலக நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை கவனத்திற்கொள்ள வேண்டுமெனவும் ஜாதிக ஹெல உறுமய கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பில் ஜாதிக ஹெல உறுமய நேற்று கொழும்பிலுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டன் தூதரகங்களுக்குத் தனித்தனிக் கடிதங்களை அனுப்பியிருக்கின்றது.

பொதுக்கட்டமைப்பிற்கு நிதி வழங்கப்படமாட்டாதென்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டை வரவேற்றிருக்கும் ஜாதிக ஹெல உறுமய, லண்டனில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்திற்காகத் தனது கவலையையும் வெளியிட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பின் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கப்படக்கூடாதென்றும், அல்-கெய்டா இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள புலிகளைப் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச யுத்தத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் கவனத்திற்கொள்ளவேண்டுமென்றும் ஜாதிக ஹெல உறுமய அந்தக் கடிதத்தில் மேலும் கேட்டுக்கொண்டுள்ளது. (எ-க)

## சட்டவிரோதமாக புத்தர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் சட்டமா அதிபர் பதவி ரீதியாகத் தனியாகவும், அந்தப் பதவியை வகிக்கும் கே.ஸி.கமலசபேசன் பெயர் குறிப்பிட்டு தனியாகவும் எதிர்மனுதாரர்களாகப் பதியப்பட்டுள்ளனர். தவிரவும் நகர அபிவிருத்திச் சபைத் தலைவர் கெமுனு சில்வாவின் பெயரும் நகர அபிவிருத்திச் சபையின் பெயரும் அடுத்த இரு எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

திருகோணமலை நகர பஸ் நிலையத்தின் மத்தியில் திடீரென முளைத்த புத்தர்சிலையை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை மேற்படி தேரர் தாக்கல் செய்திருக்கிறார்.

நேற்று இந்த மனு நீதியரசர்கள் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரர் தரப்புச் சட்டத்தரணியான எஸ்.எல்.குணசேகர ஆஜராகவில்லை. அவர் தவிர்க்க முடியாத காரணத்தால் சமுகம் தரவில்லை என்றும் - அதனால் இந்த விடயத்தை வேறு ஒரு திகதிக்கு ஒத்திவைக்கும்படியும் மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி மனோஹர் த சில்வா கோரினார்.

அரசுத் தரப்பில் - சட்டமா அதிபர் சார்பில் - ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ரி.ஆர்.டி.சில்வா இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதை ஆட்சேபித்து வாதிட்டார். இந்த மனுவை விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்யுமாறு அவர் கோரினார்.

"இந்தப் புத்தர் சிலை அரச காணியில் அனுமதியின்றி உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, அதை , அங்கிருந்து அகற்றுவதற்கு, உத்தியோகபூர்வமாகத் தமக்கு அளிக்கப்பட்ட கடமையின் நிமித்தம் சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

"இது தொடர்பாக நகர அபிவிருத்தி சபைத் தலைவருக்கு மே 30 மற்றும் ஜூன் முதலாம் திகதிகளில் சட்டமா அதிபர் எழுதியுள்ள இரு கடிதங்களை இங்கு சமர்ப்பிக்கிறேன்.

"திருகோணமலை மாவட்டத்தில் மேற்படி புத்தர்சிலை உட்பட சட்டவிரோதமாக நிறுவப்பட்டுள்ள இத்தகைய சகல மத நிலையங்களையும் அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையை சட்டமா அதிபர் இக்கடிதங்களில் கோரியுள்ளார்.

"தமக்கு அளிக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வப் பொறுப்பை சட்டமா அதிபர் நிறைவேற்றும்போது அவருக்கு எதிராக அவரைத் தனிப்பட்ட முறையிலும், பதவிப் பொறுப்பின் பெயரிலும் தனித்தனியாக எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிட்டு மனுப்போடவோ, அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக மனுச் செய்யவோ மனுதாரருக்கு உரித்து ஏதும் கிடையாது. இது, குற்றம் புரிந்த தரப்பு அடிப்படை உரிமை மீறப்பட்டதாகக் குற்றம் சுமத்துவது போலாகும்." - என்றார் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சில்வா.

எனினும், மனுதாரர் தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு வராத வேளையில் இம்மனு குறித்து முடிவெடுக்கமுடியாது என நீதியரசர்கள் தெரிவித்தனர்.

எனவே, குறுகிய கால அவகாசத்தில் இவ்விடயத்தை ஒத்திவைத்து, விவகாரத்தை முடிக்க நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் கோரினார்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பதை முடிவு செய்வதற்குரிய விசாரணையை எதிர்வரும் 18 ஆம் திகதி நடத்துவது எனத் தீர்மானித்து அத்திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தது உயர்நீதிமன்றம். (எ-க)

## புலிகளின் சகல பணிமனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் - தம்மை வெளிப்படுத்தாமல் - ஆரவாரமின்றி - அமைதியாகத் தங்கியிருப்பார்களா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் போராளிகளின் பாதுகாப்புக்குத் திட்டவட்டமான பதில் ஒன்றைத் தருமாறு இலங்கை அரசுக்கு இரண்டு வாரக் காலக்கெடுவை விதித்துப் புலிகள் ஓர் அறிவிப்பை விடுத்ததும் -

அது தொடர்பாக அரசுத் தரப்பு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாகப் புலிகளுக்கு அனுப்பிவைத்த பதில், புலிகளுக்குத் திருப்தி தரவில்லை என்று செய்திகள் வெளியாகியிருப்பதும் -

இந்த நிலையில் அரசுக்குப் புலிகள் வழங்கிய இருவாரக் காலக்கெடு இன்று முடிவடையும் பின்னணியில் கிழக்கில் தனது போராளிகளைப் பகிரங்கமாகச் செயற்படுத்துவதிலிருந்து புலிகள் விலக்கி வருவதும்-

இப்போது கவனிக்கப்பட வேண்டிய அம்சங்களாக உள்ளன.

தவிரவும், கிழக்கில் - குறிப்பாக திருகோணமலை மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தை அண்டிய பிரதேசங்களில் - புலிகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் தாக்குதல் சம்பவங்களும் இப்போதைய நிலைமை பெரும் முறுக்கமடைவதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

தொடர்ந்து கண்மூடித்தனமாக இடம்பெறும் இத்தகைய தாக்குதல் சம்பவங்களுக்கு மத்தியில் அரசியல் பணியாற்றுவதற்கு நிராயுதபாணிகளாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரும் தனது உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய கட்டாயம் புலிகளுக்கு உள்ளது என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்பாதுகாப்புத் தொடர்பில் தீர்க்கமான முடிவு ஒன்று எடுக்கப்படும் வரையில் கிழக்கில் தமது அலுவலகங்களைப் புலிகள் இயங்கவைக்கமாட்டார்கள் என ஒரு தகவல் தெரிவித்தது.

இதற்கிடையில் கிழக்கில் தமது அலுவலகங்களை மூடும் புலிகளின் நடவடிக்கை கொழும்பில் அரச வட்டாரங்களிலும் இராஜதந்திர வட்டாரங்களிலும் நேற்றுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதையும் அறியமுடிந்தது.

இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வே, இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியவையும் இவ்விடயம் குறித்து அதிக பரபரப்பும் சிரத்தையும் காட்டின.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் தாக்கப்படுவது தொடர்பில் உடனடி உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

கிழக்கிலுள்ள அரசியல் அலுவலகங்களை மூடிவிடுவது தொடர்பில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள முடிவு குறித்துக் கேட்டபோதே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது-

"திருகோணமலையில் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மட்டும் மூடப்பட்டுள்ளன என நாம் அறிகிறோம். மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் உள்ள அலுவலகங்கள் மூடப்பட்டதாக எமக்குத் தகவல் இல்லை. போராளிகளின் பாதுகாப்பு கருதி இவ்வாறு அவர்கள் நடவடிக்கைகளை எடுத்திருக்கக்கூடும்.


"தமது அரசியல் அலுவலகங்கள் தாக்கப்படுவது தொடர்பில் புலிகள் எம்மிடம் முறையிட்டுள்ளனர். அதுபற்றிய விசாரணைகளை நாம் உடனடியாக மேற்கொண்டு வருகிறோம். உரிய பதிலை விரைவில் வழங்குவோம்" இவ்வாறு ஹொக்லண்ட் மேலும் கூறினார்.

(எ-க)

பாகிஸ்தான்

# சிந்து மாகாணத்தில் நேற்று அதிகாலை மூன்று ரயில்கள் மோதிக் கொண்டன!

## 300 பேர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம்!!



இஸ்லாமபாத்,ஜூலை14

**பாகிஸ்தானில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 3 பயணிகள் ரயில்கள் மோதிக் கொண்டதில் 300 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. இதுவரை 107 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்த நூற்றுக் கணக்கானோர் வைத்தியசாலைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.**

கராச்சியில் இருந்து 600 கி.மீ. தொலைவில், சிந்து மாகாணத்தில் அமைந்துள்ள சர்ஹாத் ரயில் நிலையத்தில் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு இந்தப் பயங்கர விபத்து நடந்தது.

விபத்துக் குறித்து பாகிஸ்தான் ரயில்வே தலைவர் ஷகீல் துரானி கூறியதாவது:-

சர்ஹாத் ரயில் நிலையத்தில் குயெட்டா எக்ஸ்பிரஸ் ரயில் நின்று கொண்டிருந்தது. அப்போது, லாகூரில் இருந்து வந்த கராச்சி எக்ஸ்பிரஸ் ரயில் அதன் மீதுமோதியது. இதில் 13 ரயில் பெட்டிகள் தடம் புரண்டன.

தூக்கி வீசப்பட்ட சில பெட்டிகள் அடுத்த ரயில் பாதையில் போய் விழுந்தன. அதே நேரத்தில் அந்தப் பாதையில் வந்த கராச்சி ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் ரயில் தண்டவாளத்தில்கிடந்தகிடந்த ரயில்பெட்டிகளின் மீது மோதியதில் அதுவும் தடம்புரண்டது - என்றார்.

இதுவரை 107 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும், தடம்புரண்ட ரயில் பெட்டிகளில் இன்னும் பலவற்றை உடைத்துத் திறந்து அவற்றில் சிக்கியுள்ள பயணிகளையும், இறந்தவர்களின் சடலங்களையும் மீட்கவேண்டியிருக்கிறது என்றும் பாகிஸ்தான் ரயில்வே பொது மேலாளர் அப்துல் பாவ் தெரிவித்தார்.

இறந்தவர்களின் எண்ணிக்கை 300 பேருக்கு மேல் இருக்கும் என பொலீஸ் அதிகாரிகளை மேற்கோள்காட்டி என்.என்.ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்ஹாத் ரயில் நிலையத்தில் சமிக்ஞையை கராச்சி எக்ஸ்பிரஸ் ரயில் சாரதி சரியாகக் கவனிக்காமல் போனதுதான் விபத்துக்குக் காரணம் என ரயில்வே அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (8)

ஈராக்

## கார்க்குண்டுத் தாக்குதலில் 25பேர் உயிரிழப்பு!

பாக்தாத்,ஜூலை14

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் தென் கிழக்குப் பகுதியில் நேற்று இடம் பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 25 ஈராக்கியர் உயிரிழந்தனர். இதில அமெரிக் கப்படைவீரர் ஒருவர் கொல்லப் பட்டார் என்றும், மற்றொருவர் படுகாய மடைநதார் என்றும் நேரில் கண்டவர்கள் கூறினர்.

வெடிமருந்து நிரப்பப்பட்ட காரைச் செலுத்தி வந்த ஒருவர் அமெரிக்க இராணுவ வாகனம மீது மோதித் தாக்குதல் நடத்தினார் என்று அமெரிக்கப் படைத் தரப்புக் கூறியது. (ஓ)

அமெரிக்கா

## டிஸ்கவரி விண்கலத்தில் கண்ணாடி கழன்றது



டிஸ்கவரி விண்கலத்தின் முகப்புக் கண்ணாடி கழன்று விழுந்தது. ஆனால் விண்கலத்தைவிண்ணுக்குச் செலுத்தும் நடவடிக்கையை இது பாதிக்காது என்று நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்தனர். முகப்புக் கண்ணாடி கழன்று விழுந்த போது வெப்பத்தைத் தடுக்கும் ஓடுகள் இரண்டு சேதமானதாகவும் -

அவை அனைத்தும் உடனடியாக சீரமைக்கப்பட்டு விட்டன என்றும் -விஞ்ஞானிகள் தெரிவித்தனர். ஆனாலும் திட்டமிட்டபடி விண்கலம் ஏவப்படும் என்றும் கூறினார்.

பிரிட்டன்

# லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவம்; இரகசியக் கமரா காட்டிக் கொடுத்தது

லண்டன்,ஜூலை14

லண்டன் நகரில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளை அடையாளம் கண்டுள்ளதாக லண்டன் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் ஒரு தற்கொலைத் தாக்குதல் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகள் லண்டன் நகருக்குள் ஊடுருவியதை இரகசியக் கமரா பதிவுசெய்துள்ளது. குண்டு வெடிப்பதற்கு முன் 4 தீவிரவாதிகள் லண்டனுக்குள் சந்தேகப்படும்படி அங்குமிங்கும் நடமாடியதாகவும் இதற்குமுன் அவர்களை அங்கு பார்தத்தே இல்லை என்றும் ரயில் நிலைய ஊழியர்களும், வேறு சிலரும் தெரிவித்தனர்.

தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவன் பெயர் ஹாசிஷ் உசேன் (வயது 19). இன்னொருவன் பெயர் செஷாகத் தன்வீர். பாகிஸ்தானைச் சேர்ந்த இவர்கள் லண்டனில் படித்தவர்கள். லீட்ஸ் நகரில் தங்கியிருந்த இவர்கள் வெடிகுண்டு நிரப்பிய காரில் லண்டனுக்கு வந்துள்ளனர்.

மற்ற 2 தீவிரவாதிகளின் பெயர் விவரம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. வெடிகுண்டு ஏற்றிவந்த காரையும் லண்டன் பொலீஸார் இப்போது கைப்பற்றியுள்ளனர்.

லண்டனில் மீண்டும் குண்டு வெடிக்கும் என்று பொலீஸாருக்குத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து முக்கிய இடங்களுக்கு இதுவரை இல்லாத அளவுக்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (8)

உலக அரங்கில்

கென்யா

## ஆரம்பப் பாடசாலையில் கண்மூடித்தனமாகச் சூடு!

லண்டன்,ஜூலை14

ஆபிரிக்க நாடான கென்யாவில் ஆரம்பப் பாடசாலை ஒன்றிற்குள் நேற்று முற்பகல் புகுந்த ஆயுத தாரிகள் கண்மூடித்தனமாகச் சுட்டனர். இதில் குறைந்தது 56 பேர் கொல்லப் பட்டனர். அவர்களில் 22 பேர் சிறுவர்களாவர்.

வடகென்யாவில் உள்ள டர்பி என்ற கிராமத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது. இங்கு கப்ரா பழங்குடி இன மக்கள் வாழ்கின்றனர். எதியோப்பிய எல்லையில் குடியிருக்கும் பொரானா பழங்குடியினருக்கும் கப்ரா இனத்தவருக்குமிடையே பல ஆண்டுகளாகத் தண்ணீர் பங்கீடு மற்றும் கால்நடைகளின் மேய்ச்சல் நிலம் தொடர்பாகப் பிரச்சினை நிலவுகிறது.

இதன் காரணமாகவே இத் தாக்குதலைப் போரானா இனத்தவர் நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இரு இனத்தவரிடையே அடிக்கடி மோதல் இடம்பெற்று வந்தாலும்கூட கென்ய வரலாற்றில் படு மோசமான தாக்குதல் சம்பவம் இதுவென்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ)




இந்தியா

# சேது சமுத்திரத்திட்ட மணல் அகழ்வில் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு இல்லையாம்!

சென்னை,ஜூலை 14

சேது சமுத்திரத் திட்டத்தில் கடந்த 10 நாள்களில் மணலைத தோண்டி வேறு இடத்தில் கொட்டியதில் சுற்றுச் சூழல் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று இந்தியக் கப்பல் போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் செவ்வாய்க்கிழமை கூறியதவாது

சேது சமுத்திரத் திட்டப் பணிகள் தொடங்கி 10 நாள்கள் ஆகின்றன. இதுவரை 2 லட்சம் கனமீற்றர் அளவுக்கு மணல் தோண்டி எடுக்கப் பட்டு, 25 மீற்றர் ஆழம் இருக்கும் பகுதியில் கொட்டப்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் சுற்றுச் சூழல் பாதிப்பு குறித்துத் தினமும் ஆய்வு நடத்தப்படுகிறது. காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளது.

மணல் தோண்டும் பணி தொடங்குவதற்கு முன்பே ஜூன் மாதத்தில் இதுகுறித்த தகவல்கள் எடுக்கப்பட்டன. அப்போதிருந்த நிலைமைக்கும், இப்போது கிடைக்கும் ஆய்வு முடிவுகளுக்கும் பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை.


நாட்டில் பல்வேறு முக்கிய அமைப்புகளைச் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட சுற்றுச் சூழல் நிபுணர்கள் பங்கேற்கும் பயிலரங்கு மதுரையில் நாளை தொடங்குகின்றது. அதில் தெரிவிக்கப்படும் யோசனைகளையும் ஏற்போம். என்றார். (8)

# தாஜ்மஹால் யாருக்குச் சொந்தம்?

இந்தியாவின் ஆக்ராவில் உள்ள உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் யாருக்குச் சொந்தம் என்பதில் திடீர் சர்ச்சை எழுந்துள்ளது. முகாலய மன்னர்களின் வாரிசு என்று தம்மைக் கூறிக்கொள்ளும் பலர் தாஜ்மஹாலுக்கு உரிமை கொண்டாடுகின்றனர்.

இதுபற்றித் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த அலகாபாத் நீதிமன்றம் இதுபற்றி இஸ்லாமிய மத நிர்வாக அமைப்பான வக்பு வாரியம் விசாரிக்கவேண்டும் என்று உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து வக்பு வாரியத் தலைவர் ஹபீப் உஸ்மான் கொல்கத்தா, மும்பை உட்பட பல பகுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்து தகவல்களைத் திரட்டினார். நீண்ட விசாரணைக்குப் பிறகு அவர் நேற்றுத் தீர்ப்பு



வழங்கினார். தாஜ்மஹால் வக்பு வாரியத்துக்குச் சொந்தமானது என்று அவர் கூறினார். 17ஆம் நூற்றாண்டின் எழில் மிகுந்த இந்தக் கட்டடத்தை உத்தரப்பிரதேச சன்னிப்பிரிவு வக்பு வாரியத்தின் பெயரில் பதிவுசெய்யவேண்டும் என்று அவர் தன் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.(ஒ)

# பெங்களூர் நீதிமன்றத்தில் தினகரன் சரண்!

பெங்களூர்,ஜூலை14

சொத்துக் குவிப்பு வழக்கில் அ.தி.மு.க எம்.பி, டி.டி.வி தினகரன் நேற்றுக் காலை பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

பின்னர் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். நேற்று முன்தினம் அவருக்கு பெங்களூர் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. இதையடுத்து அவர் நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவர் ஒரு லட்சம் ரூபாய்க்கான சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் 5 ஆவது நபராகத் தினரன் பெயர் உள்ளது.



## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37598)(42.13.19)


## ஈரவிழிகளுடன் 47ஆம் நாள் நினைவஞ்சலி

| வையகம் | வானகம் |
|---|---|
| 21 | 29 |
| 02 | 05 |
| 1961 | 2005 |



அமரர்

**சின்னையா பாலதேவன்** [காந்தன்]

*குடும்பத்தின் குல விளக்காய் இருந்த நீர்– இன்று*
*இவ்வுலகைவிட்டு நீங்கி 47தினங்கள் ஓடினவோ?*
*மங்காத முழுமதியாய் எங்கள் மனமெல்லாம் நிறைந்த நீர்*
*முகில் மூடு கதிரவனாய் முகம் மூடி மறைந்ததேனோ?*

அமரர் அவர்களின் மரணச் செய்திகேட்டு உடனே வந்து ஆறுதல் கூறியோருக்கும் கடிதம், தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும், சகல வழிகளிலும் உதவி ஒத்தாசைபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றி அறிதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (14-07-2005) வியாழக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் வைபவத்தில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*காரைக்கால் வீதி,*
*இணுவில்.* (37697)(46-13-19) -குடும்பத்தினர்.

# சமுர்த்தித் திட்டப் பயனாளிகளுக்கு நடமாடும் சேவைமூலம் கடனுதவி

யாழ்.பிரதேச செயலகத்தின் யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி சுயதொழில் வாய்ப்புக்கான நடமாடும் சேவையினை அரம்பித்துள்ளது.இதன் முதற் கட்டமாக கொழும்புத்துறை ஜே/61, ஜே/ 62, ஜே/63 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளை இணைத்து நேற்று முன்தினம் கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் இந்தச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் இப்பகுதிகளைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளிகள் 24 பேருக்கு தலா 25ஆயிரம் ரூபா வீதம் கடன்வழங்கப்பட்டுள்ளது.இதில் யாழ்.பிரதேச செயலர் எம்.பற்றிக் டிறஞ்சன், யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியூபன், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.பயனாளிகளுக்கான சுய தொழில் நிதியினை யாழ்.பிரதேச செயலர் எம்.பற்றிக் டிறஞ்சன் வழங்கினார். இவ்வாறான நடமாடும் சேவைகள் யாழ்.நகர் கிழக்குப் பகுதிகளில் உள்ள ஏனைய கிராம சேவையாளர்கள் பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக வங்கியின் முகாமையாளர் கியூபன் தெரிவித்தார். (த-13)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

31–07–2005க்கு முன் பதிவு செய்து கொள்ளவும். **80% OFF**

வகுப்புக்கள் ஆரம்பம்:–
Batch II - 15/07/2005 -02.30-04.30
Batch I(a) - 16/07/2005 -11.30-12.30
Batch III - 17/07/2005 -02.00-03.00
Batch IV - 31/07/2005 -11.30-12.30

## வைத்தியம்

செங்கண்மாரி,அல்சர்,ஆஸ்துமா,
வாதநோய்கள், வலிப்பு நோய்,பீனிசம்,
தலையிடி, தலைகால் அவியல்,
சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
*சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.*

**வேலணை வைத்திய கலாநிதி**
**சி.இராசரத்தினம்**
*121,2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.*
தொலைபேசி எண்: 2459
(37520)(46-13-19)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றம்

*நடத்தும்*
*யாழ்.மாவட்ட உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான வினாடிவினாப் போட்டியின்*

**இறுதிப் போட்டி -2005**

காலம்:
நாளை [15–07–2005] வெள்ளிக்கிழமை
பிற்பகல் 2.30 மணி

இடம்:
முகாமைத்துவ விரிவுரை மண்டபம் –2

*பிரதம விருந்தினர்:*
**திருமதி தே.சிவாஸ்கரன்**
(தலைவர், முகாமைக்கற்கைகள் துறை)

வலய ரீதியாக இறுதிச் சுற்றுக்குத் தகுதிபெற்ற பாடசாலைப் போட்டியாளர்கள் அனைவரையும் இறுதிச் சுற்றுப் போட்டி ஆரம்பமாகும் நேரமாகிய காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வருகைதருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**முகாமைத்துவ மாணவர் மன்றத்தினர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**
(37701)(46-13-19


## NEW SCIENCE COLLEGE

**யாழ்.நகர்**

**இணைந்த கணிதம்**

பிரிவு – II

அனைத்துஅலகுகளும்உள்ளடக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள்.
*SAT., SUN. 11.00 -1.00*
ஆரம்பம்: 16-07-2005

பிரிவு – I

அலகு ரீதியான துரித மீட்டல்
*MON. → FRI. 6.30 - 8.00*

ஆசிரியர்:- P.செந்தில்நாதன் B.Sc.
ஆரம்பமாகிவிட்டது.
(37696)(46-13-19)

# FREE SEMINAR IN JAFFNA
## TODAY at: 10.00am

St Patrick's College London

# SPOT ADMISSION

BY: JUGAL LALSODAGAR HEAD OF INTERNATIONAL OFFICE
ST.PATRICK'S COLLEGE - UK

TO BOOK YOUR APPOINTMENTS CALL 0777-209446

PLEASE BRING YOUR EDUCATIONAL CERTIFICATES

SEMINAR WILL BE HELD AT **INSTITUTE OF INFORMATICS STUDIES**
100, Clock Tower Road, Jaffna. Tel: 021 2222831

**41 STUDENTS HAVE OBTAINED THE VISA WITHIN LAST 6 MONTHS**

**APPLY WITH O/L**

Instant Admissions will be offered for eligible students.

Sept 2005 Intake

(PART TIME WORK CAN BE ARRANGED)

• *BSC* • *MSC* • *MBA* • *PhD*

**Knowledge Management Systems**
Leading Educational Consultants and Training Providers
6-1st Floor 37th Lane, Wellawatte, Colombo 6. Tel: 2361565

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அழுத்தங்களுக்கு மத்தியில் சிக்கல்களை எதிர்கொள்ளும் தேர்தல் ஆணையாளர்

"ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் சட்டமா அதிபரோ, தேர்தல் ஆணையாளரோ, நீதிமன்றமோ இனி எதனையும் தீர்மானிக்க முடியாது. அதனை மக்கள் தான் தீர்மானிப்பார்கள். இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான திகதியைத் தீர்மானிப்பது மட்டுமே தேர்தல் ஆணையாளரின் வேலை" - இப்படி முழங்கியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியின் சார்பில் போட்டியிடப்போகின்ற வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

அவரது கட்சி நடத்திய 'மக்கள் சக்தி' பாதயாத்திரையின் முடிவில் கொழும்பில் திரண்ட பல லட்சம் ஆதரவாளர்களைக் கண்ட மகிழ்ச்சித் திளைப்பில் அவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே ரணில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க முடியாது என்று பகிரங்கமாகப் பேசியமைக்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு வழக்குத் தொடர்ந்து அவரைச் சிக்கலில் மாட்ட வைக்கலாமா என்பது குறித்து அவருக்கு எதிர்த்தரப்பில் இருக்கும் பிரகிருதிகள் சட்ட ஆலோசனை பெற்றுவருகின்றார்கள் என்று செய்திகள் தென்னிலங்கையில் கசிந்துள்ளன.

சரியோ, பிழையோ தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய 'மக்கள்எழுச்சி'ப் பாதயாத்திரைக்குத் திரண்ட மக்கள் கூட்டமும் கிடைத்த அமோக ஆதரவும் அக்கட்சியின் மட்டத்தில் ஒரு விழிப்புணர்வை - எழுச்சியை - உற்சாகத்தை - ஊட்டியிருக்கின்றது என்பது உண்மை.

அரசமைப்புப்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு நவம்பரில்தான் என்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க. அவரது அரசும், கட்சியினரும் கூட அப்படித்தான் அடித்துக் கூறுகின்றனர்.

ஆனால், பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் ரணிலோ, அவரது கட்சியினரோ அதே அரசமைப்பை ஆதாரம்காட்டி இவ்வருட இறுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

இப்போது, இதுவிடயத்தில் பந்து தேர்தல் ஆணையாளரின் களத்தில், அவர்தான் முடிவு செய்யவேண்டியவர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பதை முடிவு செய்வதற்கு முன்னர் அதுதொடர்பாகச் சட்டமா அதிபரிடம் தேர்தல் ஆணையாளர் சட்ட ஆலோசனை பெறுவார் என்பதுநிச்சயம்.

ஏனென்றால், ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு இறுதியில் நடத்துவதற்குத் தேர்தல் ஆணையாளர் முயன்றால், அதற்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகாவின் தரப்பினர் உயர்நீதிமன்றுக்குப் போவார்கள். அதேபோன்று இவ்வாண்டு இறுதியில் அதை நடத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் ஐ.தே.கட்சியினர் நீதிமன்றுக்குப்போவார்கள். எப்படியென்றாலும் ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என்ற விவகாரம் உயர்நீதிமன்றில் சட்ட இழுபறிக்கு இலக்காகும் என்பது பெரும்பாலும் நிச்சயம். யார் இவ்விடயத்தை உயர்நீதிமன்றத்துக்கு எடுத்துச்சென்றாலும் அந்த வழக்குகளில் பிரதிவாதியாக - எதிர்மனுதாரராக - குறிப்பிடப்படப்போகின்றவர்களுள் ஒருவர் நிச்சயம் தேர்தல் ஆணையாளராக இருப்பார்.

எனவே, எப்படியும் இவ்விடயத்தில் சட்டத்தையும், நீதிமன்ற விசாரணையையும் எதிர்கொள்ளவேண்டியவராகத் தாம் உள்ளார் என்ற ஐதார்த்தத்தை உணர்ந்துகொண்டுள்ள தேர்தல் ஆணையாளர், அத்தகைய சந்தர்ப்பத்தில் தனக்காக நீதிமன்றத்தில் ஆஜராகப் போகின்றவர் - ஆஜராக வேண்டியவர் - சட்ட மா அதிபரே என்பதையும் உணர்ந்துள்ளார். எனவே, இது விடயத்தில் தமது எந்த நகர்வுக்கும் முன்னர் - முன்கூட்டியே - சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளவே தேர்தல் ஆணையாளர் விரும்புவார் என்பது உறுதி. ஆகவே, ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் சட்டமா அதிபரின் வழிகாட்டுதலைத் தேர்தல் ஆணையாளர் பெறுவார் என்பதும் நிச்சயம்.

இதேசமயம், இந்த விவகாரத்தில் சிக்கல் - குழப்பம் - எழ முன்னரே இதனை உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்கு ஜனாதிபதி சந்திரிகாவே கொண்டுசென்றுவிடமுடியும். அதற்கு அரசமைப்பின் 129 (1) பிரிவு வழிசெய்கிறது.

உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்காகத் தன்மையும் பொதுசன முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு சட்டப் பிரச்சினை அல்லது நிகழ்வுப் பிரச்சினை எழுந்துள்ளது அல்லது எழக்கூடும் என ஜனாதிபதி கருதினால் அந்த விடயத்தை உயர் நீதிமன்றத்திற்கு ஜனாதிபதி சமர்ப்பிக்கலாம் என இந்தப் பிரிவு கூறுகின்றது.

அத்தகைய விடயத்தில் தனது அபிப்பிராயத்தை உயர்நீதிமன்றம் ஜனாதிபதிக்கு அறிக்கைசெய்யலாம் என்றும் அது குறிப்பிடுகின்றது.

'ஆலோசனை நியாயாதிக்கம்' என்ற தலைப்பின்கீழ் இந்த ஏற்பாடு, உயர்நீதிமன்றம் தனது அபிப்பிராயத்தை ஜனாதிபதிக்கு அறிக்கை செய்யலாம் என்றே கூறுகின்றது. அந்த அடிப்படையில் பார்த்தால், அத்தகைய உயர்நீதிமன்ற அபிப்பிராயம் ஜனாதிபதியையோ அல்லது தேர்தல் ஆணையாளர் உட்பட வேறு எந்தப் பிரஜையையோ கட்டுப்படுத்தும் ஒரு தீர்ப்பாக அமையாது என்றும் சட்ட அறிஞர்கள் பொருள் கொள்கின்றார்கள். அது வெறும் ஆலோசனையாக - அபிப்பிராயமாக - மட்டுமே இருக்கமுடியும். கட்டுப்படுத்துவதாக இருக்காது என்கிறார்கள் அவர்கள்.

எனவே, இந்த ஆலோசனை நியாயாதிக்கப் பிரிவின்கீழ், ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்ற விடயம் தொடர்பாக தமக்குச் சாதகமான ஓர் அபிப்பிராயத்தை உயர் நீதிமன்றத்திடம் இருந்து ஜனாதிபதி பெற்றாலும் கூட அது தேர்தல் ஆணையாளரை அதன்படி செயற்படக் கட்டுப்படுத்துமா என்ற கேள்வியையும் எழுப்புகின்றது.

இப்படிச் சட்டச்சிக்கலுக்குள் - நெருக்கடிக்குள் - ஆழ்த்தப்படுகின்ற பெரும் அரசியல் குழப்பமாக ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ள சூழ்நிலையில் அந்தப் பிரச்சினைகளை எதிர்கொண்டு, பலதரப்பு அரசியல் அழுத்தங்களுக்கும் முகங்கொடுத்து, நியாயமாக நடந்துகொண்டு, தேர்தலை ஒப்பேற்றி முடிக்கவேண்டிய இக்கட்டில் இருக்கின்றார் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க.

ஓய்வுபெறும் வயதையும் தாண்டி, ஐந்து ஆண்டுகள் கடந்தும், புதிய ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படாததால் தமது பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படைக்கவும் முடியாமல், வயது மூப்புக் காரணமாகப் பணியைத் தொடரவும் முடியாமல் அல்லாடும் தேர்தல் ஆணையாளர் ஏற்கனவே மோசமான இருதய நோயாளி. இந்த அழுத்தங்களுக்கு மத்தியில் தமது கடமையை அவர் ஒப்பேற்றுவது சிக்கலுக்குரியதுதான்.

# மூன்று நாள் இந்து மாநாடு நாளை தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பம்

## அகில இலங்கை இந்துமாமன்றப் பொன்விழாவையொட்டி நடைபெறுகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை 14

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழாவையொட்டி, அம்மன்றமும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து மூன்று நாள்களுக்கு இந்து மாநாடு ஒன்றை நடத்தவுள்ளன.

இந்து மாநாட்டின் ஆரம்பவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளையின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரைகளை இந்து மத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஜ.மகேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் ஆகியோரும் தொடக்கவுரையை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை அருட்கவி சீ.விநாசித்தம்பி, இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு.மோகனதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

'மாநாட்டின் நோக்கம்' என்னும் விளக்கவுரையை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் மாநாட்டின் அறிமுகவுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ"ம் நிகழ்த்துவர்.

இந்தியாவிலிருந்து வருகைதரும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக முதுநிலை தமிழ் பேராசிரியரும் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறப்பு நிலை பேராசிரியருமான சோ.ந. கந்தசாமி 'என்றும் நிலைக்கும் எம் சமயம்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வு, 'இந்து ஒளி' சிறப்பிதழ் வெளியீடு, கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இந்து மாநாட்டில் சிறப்பு அமர்வுகளும் செயலமர்வுகளும் இடம்பெறும்.

முதல்நாள் செயலமர்வில் காலை 9 மணி தொடக்கம் 10.30 மணி வரை சிறப்பு அமர்வும் முற்பகல் 10.45 மணி முதல் 12.45 மணிவரை வழிபாட்டு நோக்கில் (அமர்வு 1), வாழ்வியல் நோக்கில் (அமர்வு 2) என இரண்டு அமர்வுகளும் -

பிற்பகல் 1.45 மணிமுதல் 3.15 மணி வரை வழிபாட்டு நோக்கில் (அமர்வு 3), வாழ்வியல் நோக்கில் (அமர்வு 4) என்னும் இரண்டு அமர்வுகளும் - பிற்பகல் 3.30 மணிமுதல் மாலை 5.30 மணி வரை வழிபாட்டு நோக்கில் (அமர்வு 5), வாழ்வியல் நோக்கில் (அமர்வு 6) என்னும் இரண்டு அமர்வுகளுமாக 6 அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை செயலமர்வில் காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை சிறப்புச் செயலமர்வும் முற்பகல் 10.45 மணிமுதல் 12.45 மணிவரை வரலாற்று நோக்கில் (அமர்வு 7) மெய்யியல், விஞ்ஞான நோக்கில் (அமர்வு 8) என்னும் 2 அமர்வுகளும் -

பிற்பகல் 1.45 மணிமுதல் 3.15 மணி வரை வரலாற்று நோக்கில் (அமர்வு 9), கலை, கல்வியியல்நோக்கில் (அமர்வு 10) என்னும் இரண்டு அமர்வுகளுமாக 4 அமர்வுகள் இடம்பெறும்.

சிறப்பு அமர்வுகளின் போது தமிழகத்தில் இருந்து வருகை தரும் பேராசிரியர் சோ.ந.கந்தசாமியின் சிறப்புரைகள் இடம்பெறும்.

சனிக்கிழமைக்கான சிறப்பு அமர்வில் "திருமுறைக் குறிக்கோள்" என்ற பொருளிலும் ஞாயிற்றுக்கிழமைக்கான சிறப்பு அமர்வில் "புராணத்தின் படிப்பினைகள்" எனும்பொருளிலும் அவர் உரையாற்றுவார். பேராசிரியரின் உரைகள் நடைபெறும் சிறப்பு அமர்வுகளில் பேராளர்கள் அல்லாதோரும் பங்குபற்றி பயன் அடையலாம். ஏனைய செயலமர்வுகளில் பேராளர்கள் மட்டுமே கலந்து கொள்வர்.

(அ-202)



நல்லூர் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கலாசார விழாவில் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையுரை நிகழ்த்துவதையும் கலைஞர் ஒருவருக்குத் தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும், தாயகம் நாடகத்தின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.

# தெல்லிப்பழை சூனியப் பிரதேசத்தில் பட்டப்பகலில் நகைகள் கொள்ளை!

வலி.வடக்கு,ஜூலை14

தெல்லிப்பழை உயர்பாதுகாப்பு வலயத்திற்கு அருகில் சூனியப் பிரதேசத்தில் இருக்கின்ற வீட்டில் பட்டப்பகலில் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பன திருடிச் செல்லப்பட்டுள்ளன.

உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் உள்ள தி.நவரத்தினம் என்பவரின் வீட்டில் இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

கணவன் மனைவி இருவரும் பாடசாலைக்குச் சென்றதைத் தொடர்ந்து வீட்டின் கதவுகளை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் 22 பவுண் நகைகளையும் மற்றும் ஒரு தொகைப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளார்கள்.

வீட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டியையும் எடுத்து வேறு ஓர் இடத்தில் மறைத்து விட்டுத் திருடர்கள் சென்றுள்ளார்கள். அது பின்னர் வீட்டுக்காரர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக தெல்லிப்பழை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(த-86)

## உதயவாக்கு

*இருள் என்று சொல்லிக் கொண்டு சும்மாயிருப்பதை விடுத்து, ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்று, இருள் ஒளியாகிவிடும்.*

*- கன்பூசியஸ்.*

## நாளை

ஆனி 31
வெள்ளிக்கிழமை
15.07.2005
திதி: நவமி
பின்னிரவு 4.07வரை
நட்சத்திரம்: சித்திரை
முற்பகல் 8.43 வரை
சுபநேரம்: 06.00 - 7.30
ராகுகாலம்: 10.30- 12.00
(யாவும் பழைய நேரப்படி)

# இடம்பெயர்ந்த மக்கள் நாளை பாதயாத்திரைக்கு ஏற்பாடு

## மருதனார்மடத்திலிருந்து மாவிட்டபுரம் வரை

வலி.வடக்கு,ஜூலை14

யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாதயாத்திரை நாளை வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் இருந்து பாற்செம்பு, கரகம், கற்பூரச்சட்டி, காவடி சகிதம் மாவிட்டபுரம் வரை இந்தப் பாதயாத்திரை இடம்பெறவிருக்கின்றது.

பாதயாத்திரைக் குழுவினர் மருதனார்மடத்திலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வீதி வழியாக உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைச் சென்றடையத் திட்டமிட்டிருக்கின்றனர்.

இப்பாதயாத்திரையில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(த-86)



## உடன் தேவை

தொலைத்தொடர்பு நிலையத்தில்
பணிபுரிவதற்கு பெண்பிள்ளை ஒருவர் தேவை.
(முன் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது)
தொடர்பு:
ஹாரு தொலைத்தொடர்பு நிலையம்,
123, கண்டி வீதி, அரியாலை.
T.P. 021-4590566
(37675) (39-19-13-21)

## மருந்தகங்களின் உரிமையாளருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை14
யாழ்.மாவட்டத்திலுள்ள ஆங்கில மருந்தக உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-202)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை14
கைதடி நவீல்ட் பாடசாலையின் செவிப்புலனிழந்த பழைய மாணவர் சங்கத்தின் 38ஆவது ஆண்டுவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சங்கத்தின் உபதலைவர் நா.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்வார்.
(த-117-202)

## மகளிருக்கான விசேட அலங்காரப் பயிற்சி வகுப்பு

தலைநகர் கொழும்பில் 8 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்தவரினால் மகளிருக்கான பயிற்சி வகுப்புகள் யாழ். நகரில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
நடைபெறவுள்ள பயிற்சிநெறிகள்:-

* Beauty Culture
* Dress making
* Cake making & Icing
* Structure
* Sugar flower
* Painting (Cut work, Net work, Paint work, Gilter work, Dust work, Beads work, Cord work)

அனைத்து ஒடர்களும் எடுக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
காலம்: 2 மாதங்கள்
நடைபெறும் இடம்:
K.K.S. Road, உப்புமடம், கோண்டாவில் மேற்கு,கோண்டாவில்.
தொடர்பு: 0777 311403
(சி/42014) (24-21-13-19)

## கண்ணீர் அஞ்சலி



கொழும்புத்துறையைச் சேர்ந்தவரும் யாழ்.பல நோ.கூ. சங்கத்தின் 32 வருட காலப் பணியாளருமாகிய
**அமரர் சுப்பிரமணியம் சிவலோகநாதன்**
(கிளை முகாமையாளர்)
அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அதிர்ச்சியையும் அஞ்சலிகளையும் தெரிவிக்கின்றோம்.அன்னாரது பேரிழப்பால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். (37022)(42-21-19-13)
யாழ்.பல நோ.கூட்டுறவுச் சங்க ஊழியர் தொழிற்சங்கம்.

## இலவச கணனிப் பயிற்சி

TITA கணனிப் பயிற்சி நிலையத்தின்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 16.07.2005 சனிக்கிழமை
பிரிவு I 8.30 மணிக்கும்
பிரிவு II 10.00 மணிக்கும்
TITA கணனிப் பயிற்சி நிலையம், இளந்தாரி கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவில். (37685) (39-21-13-19)
இணுவில் கிழக்கு இளைஞர் கழகம். நிர்வாகம்.

## இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா!

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபலபல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுக்கருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.



**இ. பிரதீபன்**
**மானிப்பாய்.**
2003ஆம் ஆண்டு கணிதப்பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நான் கொழும்பு இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் ஆவேன். பல்கலைக்கழக அனுமதிக்கு எனது A/L பெறுபேறுகள் சற்றுப்போதாமல் இருந்தது. இந்நிலையில் கணனித்துறையில் எனக்கிருந்த ஆர்வம் கணனித்துறையில் ஓர் பட்டப்படிப்பினை மேற்கொள்ளவேண்டும் என்ற பேரவாவாக மாறியது. எனது ஆர்வத்திற்கு பெற்றோரும் பக்கபலமாக இருந்தனர். கொழும்பில் வசித்துவந்த நான் யாழ்ப்பாணத்தில் IIS நிறுவனம் சர்வதேச ரீதியில் பிரபல்யமான BTEC HND கற்கைநெறியினை நடாத்திவருவதாகக் கேள்வியுற்றேன். கொழும்புடன் ஒப்பிடும்போழுது குறைந்த செலவில் இக்கற்கைநெறியை யாழ்ப்பாணத்தில் கற்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதை அறிந்த எனது பெற்றோர் HND ஐத் தொடர அனுமதியளித்தனர். HND 4வது பிரிவில் பயின்றுவரும் நான் இறுதியாண்டுப் பட்டப் படிப்பினை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குரிய ஏற்பாட்டினையும் IIS நிறுவனமே எனக்கு செய்துதரவுள்ளது. என்போன்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறிய மாணவர்களுக்கு HND மிகச்சிறந்த ஒன்றாகும்.



**அ.அஜந்தா**
**யாழ்ப்பாணம்**
நான் தற்பொழுது IIS இல் HND 4வது பிரிவு மாணவி. வேம்படி மகளிர் கல்லூரியின் 2002 உயர்தர கணிதப்பிரிவு மாணவியாகிய நான் சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினைத் தவறவிட்டேன். இந்நிலையில் யாது செய்வதென அறியாதிருந்த எனக்கு IIS நிறுவனம் ஓர் கலங்கரை விளக்குப்போல் காட்சியளித்தது. சர்வதேச தரம்மிக்க பிரித்தானிய சான்றிதழுக்கான Edexcel இன் BTEC HND கற்கைநெறியில் இணைந்து கொண்டதன் மூலம் எனது பெற்றோர் ஒளிமயமான என்னெதிர் காலத்திற்கு வித்திட்டுள்ளனர். எனது எதிர்காலம் தொடர்பான ஓர் தெளிவான நிலையில் தற்பொழுது நான் இருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. 1½ வருட இக்கற்கைநெறியை முடித்துக் கொண்டதும் எனது 3ம் ஆண்டுப் பட்டக்கல்வியை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளேன். இதன் மூலம் ஓர் மிகக்குறுகிய காலத்தில் கணனித்துறையில் பட்டதாரியாகும் வாய்ப்பினை IIS நிறுவனம் ஏற்படுத்தித் தந்ததையிட்டு நானும் எனது பெற்றோரும் மனநிறைவடைகின்றோம்.

**BTEC HND**

World Class Qualifications

*Delivered Locally....... Recognised Globally*

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

↑

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

↑

GCE A/L
with 2 Subjects

**New Batch Starts on 17.08.2005 at 10.00 a.m.**

edexcel INTERNATIONAL
Approved Training Centre

## IIS CITY CAMPUS

# 181, Navalar Road, Jaffna.
TP No.: 021 222 8060 / 021 222 2201

உ
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
**நிறுவியவர் நினைவு தினமும் சிரேஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும்**

தலைவர்: திரு.பொ.சுந்தரலிங்கம் (அதிபர்)
இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 15.07.2005 வெள்ளிக்கிழமை
முற்பகல் 9.00 மணி
பிரதம விருந்தினர்: பேராசிரியர் செ.சிவயோகநாதன்
B.Sc. Agri (Ceylon), M.Agri St (Qld), Ph.D(Texas)
(விவசாயபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்)
நினைவுப் பேருரை: பேராசிரியர் பொ.இரகுபதி
B.A. (Hons), M.A. Ph.D
(வருகைப் பேராசிரியர், கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: உயர்திரு ச.கைலாசநாதன்
(உதவிக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
கௌரவ விருந்தினர்: கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி (J.P)
பரிசில் வழங்கல்: திருமதி கலாவல்லி சிவயோகநாதன்
நன்றியுரை: திரு.பா.கிருபாகரன்
(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*
(37684)(21-19-13) - பாடசாலைச் சமூகம்.

நிதி முகாமைத்துவம் மற்றும் பங்குச் சந்தை தொடர்பான
## விசேட செயலமர்வு

காலம்:- 16.07.2005 சனிக்கிழமை
பிற்பகல் 3.00- 6.00 மணி வரை
இடம் :- யூரோவில் கேட்போர் கூடம்,
17, கமத்தொழில் சேவை நிலைய வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

• நிதி முகாமைத்துவம் மற்றும் மூலதனச் சந்தை
திரு.S.ஜெயவர்மன் FCA , FSCMA – (பட்டயக் கணக்காளர்)
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.
NATIONAL ASSET MANAGEMENT LTD (NAMAL)
(SUBSIDIARY OF DFCC BANK)

• மத்திய வைப்புத் திட்டத்தில் கணக்கு ஆரம்பிப்பது எப்படி? (CDS ACCOUNT)
பங்குச் சான்றிதழ்களை மத்திய வைப்புத்திட்டத்தில் வைப்பில் இடுவது எப்படி?
திரு.V.நிரஞ்சன்
ஆலோசகர்
BARTLEET MALLORY STOCKBROKERS (PVT) LTD.

• Dialog Telekom பங்குகள்– ஓர் சிறந்த முதலீடு?
கலந்துரையாடல்

மேலதிக விவரங்களுக்கு:
0212222849/ 0212227012
0773 - 043206/ 0773 - 130061
ORGANIZED BY:
Bartleet Mallory Stock Brokers (pvt) Ltd.
National Asset Management Ltd.
(சி-42037) (39-21-13-19)

அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக் கழகம் தனது 58 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும்

## சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

காலம்: 16.07.2005 சனிக்கிழமை
காலை 6.30 மணி (S.L.T)
இடம்: அராலி தெற்கு களவத்துறை சனசமூக நிலைய முன்றிலில்
இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் 16.07.2005 சனிக்கிழமை காலை நேரில் சமுகமளிக்கவும்.
☞ போட்டிகள் யாவும் எமது கழக விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.
கட்டணம்: சைக்கிள் ஓட்டம் 200/-
மரதன் ஓட்டம் 100/-
மேலதிக விவரங்களுக்கு நேரில் சந்திக்கவும். (37680)
(21-19-13) - அராலி தெற்கு களவத்துறை வி.கழகத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் இரங்கல் திருப்பலியும்

அன்னை மடியில் 19 - 04 - 1936



இறைவன் அடியில் 14 - 06 - 2005

## அமரர் சின்னட்டி சின்னப்பு

அமரர் அவர்களின் மரணச்செய்தி கேட்டு வந்து ஆறுதல் கூறியோருக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்ம இளைப்பாறுதலுக்காக இன்று (14.07.2005) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு கோப்பாய் தெற்கு மரியன்னை ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் கலந்துகொள்வதோடு அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
'சுதர்ஸ் இல்லம்'
விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (37672)(21-19-13)
தகவல்: மகள்.

# தலைவரின் கரங்களைப் பலப்படுத்தி சிவகுமாரன் கனவை நனவாக்குவோம்

அண்ணன் சிவகுமாரன் தாய் மண்ணிற்காகத் தன்னுயிரை ஈந்தான். அவரது கனவுகள் நனவாகும் இந்த நேரத்தில் தலைவர் பிரபாகரனின் கரங்களைப் பலப்படுத்தி எம் தேசியத்தை உறுதிப்படுத்திக்கொள்வோம்.

மேற்கண்டவாறு கோப்பாய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்பரிதி குறிப்பிட்டார்.

சிவகுமாரனின் 31ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் உரும்பிராய்ச் சந்தியில் உள்ள நினைவுத் தூபியில் கோப்பாய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந.சிவகடாட்சம் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய செம்பரிதி கூறியதாவது:-

சிவகுமாரன் தனது சிறுவயதிலேயே இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் செய்யவேண்டியது நிறையவே உண்டு என்பதை உணர்ந்து செயற்பட்டவர். பலவற்றைச் சிறு வயதிலேயே சந்தித்தும் முடித்துள்ளார். இவரைப் பெற்ற தாய், தந்தையர் புனிதமானவர்கள். இவர்கள் நேசிக்கப்படவேண்டியவர்கள். மதிக்கப்படவேண்டியவர்கள்.

இவரின் சிலை மூன்று தடவைகள் உடைக்கப்பட்டது. 1977ஆம் அண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து இரவோடிரவாகப் பாரிய இராணுவ வாகனங்கள், படையணியுடன் வந்து, இச் சிலையினை உடைத்தார்கள். இரண்டாம் தடவை 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து உடைத்தார்கள். மீண்டும் மூன்றாம் தடவையாக 1995ஆம் ஆண்டு ஜெயசிக்குறு நடவடிக்கையின் போது தமிழ்த் துரோகிகளுடன் இணைந்து உடைத்தார்கள்.

இது எதனைக் காட்டுகின்றது என்றால், இவரின் பெயரைக் கேட்கும்போதும் நினைவுச் சிலையையும் படத்தையும் காணும் போதும் கூடப் பயப்படும் நிலைமையே காணப்படுகிறது. அதனால்தான் வெறுமனே இருக்கும் நினைவுத் தூபியைக்கூட உடைத்துத்தள்ளும் மனோ நிலைமை காணப்படுகின்றது - எனக் குறிப்பிட்டார்.

முன்னாள் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஆ.நடராசா உரையாற்றும் போது கூறியதாவது:-

எமது விடுதலைப் போராட்டம் முக்கிய கட்டத்தில் உள்ளது. இதற்காக நாம் காலத்தின் தேவையை உணர்ந்து செயற்படவேண்டும். இதில் தவறுவோமாக இருந்தால், காலம் எம்மைத் துரோகியென்றே பார்க்கும். ஆகவே, காலம் இட்ட கட்டளையை உணர்ந்து நாம் அனைவரும் இணைந்து இந்த விடுதலைக்கு எம்மாலான பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு எந்தவொரு உரிமையும் கொடுக்கக் கூடாது என்பதற்காகச் செயற்படுகிறார்கள். நாம் இதற்கு எதிராக எதனையும் முழுமையாகச் செய்யவில்லை. இதேநேரம் எம்மிடம் போதிய விழிப்புணர்வும்கூட ஏற்படவில்லை. இந் நிலைமையை நாம் நீடிக்கக்கூடாது.

எம்மால் எங்தெந்த வகைகளில் இந்த விடுதலைப் போராட்டத்திற்குப் பங்களிப்புகளைச் செய்யமுடியுமோ, அதனைச் செய்வதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் தலைமையினதும் கைகளைப் பலப்படுத்துவதன் மூலமே நாம் சிங்களப் பேரினவாதத்தின் நடவடிக்கைகளை முறியடிக்க முடியும் - எனக் குறிப்பிட்டார்.

(ப-86)

# நாம் சுதந்திரமாக சுயநிர்ணய உரிமையுடன் வாழ இனம் மட்டுமல்ல சமூகமும் விடுதலை பெறவேண்டும்

## தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை14

இன விடுதலையுடன் சமூக விடுதலையும் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே நாம் சுதந்திரமான ஒரு இனமாகச் சுயநிர்ணய உரிமையுடன் வாழ முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் உமைநேசன்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் 6ஆவது பேராளர் தேசிய மாநாட்டில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தாவது:-

தற்போதுள்ள அரசு தமிழ் மக்களுக்கு உருப்படியான தீர்வைத் தரும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. ஜே.வி.பி. தமிழ் இனத்தை அழித்துவிடவேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கின்றது.

இந்த வேளையில், நிதானமாகவும் அவதானமாகவும் இருக்கவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். நீண்டகாலமாக விடுதலைக்காகப் பல்வேறு அர்ப்பணிப்புகளை நாம் செய்துள்ளோம். இனிமேலும் அர்ப்பணிப்புச் செய்வதென்றால் அதற்கு ஒரு அர்த்தம் இருக்கவேண்டும். எமது தேசியத் தலைவர் மிகவும் நுட்பமாக யோசித்துச் செயலாற்றிக்கொண்டிருக்கிறார். எனவே, நாமும் மதிநுட்பத்துடன் செயற்படவேண்டும்.

பொதுக்கட்டமைப்பு என்ற ஒரு சகதிக்குள் நாம் மூழ்கிப்போயுள்ளோம். அதிலிருந்து நாம் விடுபடவேண்டும். இதற்கான விழிப்புணர்வுப் பிரசாரங்களைத் தேசிய எழுச்சிப் பேரவை முன்னெடுக்க வேண்டும். மக்கள் சக்திநிலையை ஒன்றிணைப்பதன் மூலம் தேச விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கவேண்டும்.

இன விடுதலையை முன்னெடுக்கும் அதேவேளை, சமூக விடுதலையையும் நாம் முன்னெடுக்கவேண்டும். அதற்கான விதிகளை செயற்படுத்த தேசிய எழுச்சிப் பேரவை தயாராக வேண்டும் - என்றார்.

(8-7-86)

# அந்நியகலை, கலாசார ஆக்கிரமிப்புக்கு எதிராக அனைத்துக் கலைஞர்களும் போராடவேண்டும்

## சலனசித்திர அமைப்பின் நிறுவுனர் கோரிக்கை

"அந்நிய கலை, கலாசார ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுவதற்கு இந்நாட்டிலுள்ள தேசப்பற்றுள்ள அனைத்துக் கலைஞர்களையும் துணிந்து முன்வருமாறு 'சலன சித்திரம்' அழைப்பு விடுக்கின்றது."

- இவ்வாறு தெரிவித்தார் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தமிழ்ப்பிரிவின் பணிப்பாளரும் 'சலன சித்திரம்' அமைப்பின் நிறுவுநர் க.தேவதாசன்.

அமைப்பின் ஆட்சிக் குழுக்கூட்டம் அண்மையில் கல்கிசையிலுள்ள சம்மேளனத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில்:-

எமது நாட்டில் மூன்று வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமைபோலப் பேரினவாதமும் யுத்த அபாயமும் அந்நியத் தலையீடுகளும் மீண்டும் ஏற்படும் சாத்தியமுள்ளது. இன்றைய ஆபத்தான காலகட்டத்தில் எமது கலையினதும் மக்களினதும் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய பொறுப்பு மக்கள் அமைப்புகளுக்கு உண்டு.

இக்கட்டான இந்த நேரத்தில் சரியானதொரு முடிவு எங்களால் எட்டப்படாவிட்டால் எமது கலையும், மக்களும் அழிவதை வெறுமனே கைகட்டி வேடிக்கை பார்ப்பவர்களாக மட்டுமே நாம் இருக்கவேண்டிவரும்.

சினிமா என்ற பெயரில் தேவையற்ற குப்பைகள் எம்மீது கொட்டப்படுவதைத் தடுக்க வேண்டும். எத்தகைய சமூக, கலை, பொருளாதாரம் என்பவை எம்மீது திணிக்கப்படுகின்றது என்பதைச் சாதாரண மக்களும் கலைஞர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும். அமெரிக்க, இந்திய மாயாஜாலங்களில் மயங்கிக்கிடக்காது மக்கள் விழிப்படைய வேண்டும். இவற்றுக்கு எதிராகக் குரல்கொடுக்கின்ற சமூகக் கடமையில் இருந்து சுதேசிய கலைஞர்கள் பின்வாங்கமுடியாது. சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பு கலைஞர்களுக்கும் உள்ளது - என்றார்.

தொடர்ந்து சம்மேளன நிர்வாகத் தெரிவும் நடைபெற்றது.

(ப-204)

# பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்



யாழ்.ஜூலை14

சிரான் போன்று பொதுக்கட்டமைப்பிலும் அரசு தமிழர்களை ஏமாற்றி விடக்கூடும். எனினும் இலங்கையில் இரண்டு நிர்வாகங்கள் உள்ளன என்பதை சர்வதேச சமூகம் இந்தப் பொதுக்கட்டமைப்பு மூலம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தீவகத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தில் ஒரு நடைமுறை அரசு உருவாகியிருகின்றது. ஒரு நிர்வாகம் இருக்கின்றது. ஒரு காவல்துறை இருக்கின்றது. எங்களுக்கென்று ஒரு மனித உரிமை அமைப்பு இருக்கின்றது. ஓர் அரசுக்கு என்னென்ன கட்டமைப்புகள் தேவையோ அவையெல்லாம் கொண்டதாக ஒரு நடைமுறை அரசு உருவாக்கியுள்ளது. இந்த நிலைமை உருவானது ஆயுதப்போராட்டத்தின் விளைவாகத் தான்.

அதன் பலனாகப் பேச்சு நடத்தப்பட்டு 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு 6 சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றன. அதனூடாக சிரான் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சிரான் அமைப்புக்கு நடந்தது உங்களுக்கு தெரியும். அதன் பிறகு இன்றைக்குப் பொதுக்கட்டமைப்பு என்ற பெயரில் கையெழுத்து வைத்திருக்கின்றோம்.

எங்களுடைய வரலாறு தொடர்ந்து கையெழுத்திடுவதும் அது கிழிக்கப்படுவதும் பின் அது கைவிடப்படுவதும் தான். அந்த வகையில் நாங்கள் இதையும் விழிப்புடன் அவதானிக்க வேண்டும். இதில் அரசியல் ரீதியாக நாங்கள் இன்னும் கூர்மைப்பட வேண்டியுள்ளது.

சிரானுக்கு நடந்தது இந்தப் பொதுக்கட்டமைப்புக்கும் நடக்காமல் விழிப்போடு இருக்க வேண்டும். பொதுக்கட்டமைப்பினூடாக ஒரு முக்கியமான விடயத்தை உணரலாம். இலங்கையில் இரண்டு நிர்வாகங்கள் இருக்கின்றன என்பதை வெளிநாடுகள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில் தான் எங்களுக்குரிய கொடுப்பனவுகள் எல்லாம் விடுதலைப் புலிகளினூடு வருவதற்கான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கட்டமைப்பைச் செய்யவல்லவர்கள் விடுதலைப் புலிகள் தான் என்பதையும் இது காட்டியிருக்கின்றது. இவையிரண்டும் பொதுக்கட்டமைப்பினூடாகக் கிடைத்த பெறுமதியான செய்திகள். தமிழர்களுடைய உரிமைகளைப் பொறுத்தவரையில் பொதுக்கட்டமைப்பு என்பது ஒரு சிறு துளி நாங்கள் பெற வேண்டிய உரிமை மிகப்பாரியது.

- இவ்வாறு பத்மினி சிதம்பரநாதன் மேலும் தெரிவித்தார்.

(ப-204)




# பெருகிவரும் நன்மதிப்பைக் குறைக்கவே அரசு எம்மீது போரைத் திணிக்கிறது

## முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் குற்றச்சாட்டு



முல்லை.ஜூலை14

சர்வதேச ரீதியாக விடுதலைப் புலிகள் அமைப்பு மீது பெருகிவரும்நன்மதிப்புக்களை கெடுக்கும் நோக்குடனேயே ஸ்ரீலங்கா அரசு எம்மீது போரைத் திணிக்க முற்படுகிறது.

இவ்வாறு அரசு மீது குற்றம் சுமத்தியுள்ளார் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன்.

சமகால அரசியல் நிலைமைகளை விளக்குவதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் தண்டுவன் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே முகுந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது அவர் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகள் மீது கொண்டிருந்த கருத்துகள் தற்போது மாற்றமடைந்து வருகின்றன. அவை எம்மீது நன்மதிப்பை வைத்து எமது கோரிக்கைகளைச் செவிமடுக்கத் தொடங்கியுள்ளன. இதனைப் பொறுத்துக்கொள்ளமுடியாத அரசு எம்மீது வலிந்து யுத்தத்தைத் திணிக்க-யுத்தத்தை ஆரம்பிக்க முயற்சி செய்து வருகின்றது. அதனையே அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் அசம்பாவிதங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஸ்ரீலங்கா அரசில் சேர்ந்துள்ள கூட்டுக் கட்சிகள் மற்றும் இதர கட்சிகளுக்கிடையே காணப்படும் முரண்பாடு, கருணாவின் துரோகத்தனம், எம் மீதும் எமது மக்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கொலை வெறித் தாண்டவம் என்பவற்றிற்கு எவ்விதமான பதில் தாக்குதல்களையும் மேற்கொள்ளாது நாம் காத்துவரும் பொறுப்பை- மற்றும் சுனாமி அனர்த்தத்தினால் எமது கடற்படைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அரசு போட்டு வைத்துள்ள தப்புக் கணக்கு என்பவையும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான காரணங்களாக அமையலாம்.

இந்த மூன்றாண்டு கால சமாதானச் சூழ்நிலையில் எமது மக்களுக்கான இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவில்லை. இருந்தபோதும் சர்வதேச ரீதியாக தமிழர்களின் தேசவிடுதலைப் போராட்டம் தொடர்பான உண்மை நிலையை சர்வதேசம் அறிந்து கொள்ளக் கூடியதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது தான் நாம் கண்ட மிகப் பெரிய வெற்றி.

# CARITAS - HUDEC JAFFNA
# VACANCY

**Position Vacant:**

**1. Senior Manager in Construction**
To work in full partnership with the Caritas Internationals Program Expatriate Advisor in managing, monitoring and evaluating projects.

**Base Station: Mullaitivu**

Qualification & Experience:
The post holder reports directly to the Program Manager (Expatriate) and the Assistant Director of Caritas-Hudec-Jaffna. The post holder will undertaken the following activities.

1) Grade I Technical Officer / Civil Engineer with 15-20 years experience in the same field
2) Experience in Project Planning, Implementation, Monitoring and Evaluating.
3) Excellent skill in monitoring implementation of program activities.
4) Strong interpersonal and liaison skills.
5) Computer literacy in WinWord, Excel and email software.
6) Age between 40-50 years.
7) Good knowledge of written and spoken English and able to prepare Monthly Progress Report.
8) Good team player
9) Represent Caritas-Hudec on the issue of shelter activities at district and divisional level coordination meetings with government, NGO's, UN organizations and the private sector.
10) Regular visits to monitor progress of programme activities and regular reporting back to Programme Manager
11) Post based in Mullaitivu, with regular visits to Killinochchi and Jaffna.

**2. Secretary**
To work in full partnership with the Caritas Internationals Program Expatriate Advisor in managing, monitoring and evaluating staff personals. The post holder will undertaken the following activities.

**Base Station:** Killinochchi

**Qualification & Experience:**
The post holder reports directly to the Project Coordinator (Expatriate) and the Assistant Director of Caritas-Hudec-Jaffna.

1) Should have Secretariat / administrative background.
2) Assist the management on all programmatic matters such as developing and maintaining a filing system, compilation of beneficiary data basis (livelihood, housing, micro-finance).
3) Translate documents into Tamil or English as required and provide printed copies & letter drafting.
4) Maintain address lists and contact numbers of national and international staff and other essential telephone numbers of organizations, hotels and services useful for the programme.
5) Realize correspondence and reporting for the Senior Construction Manager and letter drafting or contracts for the finance manager with external organizations, governments, banks, supplier's beneficiary groups, including the related e-mail.
6) Good command in English (oral & written)
7) Computer literacy in MS Office and email software.
8) Ability to work independently.
9) Excellent analytical skills.
10) Good team player.

**3. Senior Manager in Logistics**
To work in full partnership with the Caritas Internationals Program Expatriate Advisor in managing, monitoring and evaluating logistic activities.

**Base Station:** Killinochchi

**Qualification & Experience:**
The post holder Report directly to the Director and in his absence to the Program Coordinator (Expatriate or Counter part). Reporting is verbally & in written (English). The post holder will undertaken the following activities.

1) Have excellent knowledge in Logistic field and at least 3 years experience in the same field.
2) Plan and manage all activities related to procurement transportation and storage of materials & equipment as necessary for the program implementation out side the construction department.
3) Assist the Purchasing Office in preparing tenders, documents & receipt of quotations as necessary.
4) Assist to give the presence of his staff on every logistics sector and give monthly time report to the Director & Personal Administrator.
5) Assist at the beginning of the month with the Budget Controller to make a provision expenses regarding logistic activities.
6) Have to submit monthly running chart sheets (Pickups, Motor Bikes, Tractors, Trucks) & explanatory about assets materials in Word (including inventory).
7) Supervise all distribution of materials as per Program implementation out side construction department.
8) Post based in Killinochchi, with regular visits to Mullaitivu and Jaffna.

**4. Livelihood Manager**
To work in full partnership with the Caritas Internationals (CI) Livelihood Program Expatriate Advisor in designing, managing, monitoring and evaluating projects which assist individuals affected by the tsunami to restore their livelihoods.

**Base Station:** Killinochchi

**Qualification & Experience:**
The post holder Report directly to the overall Program Manager / Coordinator. The post holder will undertaken the following activities.

1) Direct, supervise and manage project officers, project managers and animators/social workers in identifying projects through a participatory process which are inclusive of a diverse group of individuals, including vulnerable group.
2) Ensure a high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluating.
3) Identify capacity building needs to team's project officers, project managers and animators/social workers and local partners.
4) Organize training and workshops to build and improve capacities of the above mentioned staff.
5) Prepare accurate and timely reports to donors.
6) Share experiences, methodologies and lessons learned with CI Livelihood partner in other Diocese of Sri Lanka.
7) Represent Caritas-Hudec on the issue of livelihood and income generating activities at district and divisional level coordination meetings with government, NGO's, UN organizations and the private sector.
8) Work with project officers to regularly monitor and evaluate livelihood programs (fisheries, agriculture, small enterprises)
9) Experience using word processors, spread sheets and email.
10) Fluency in Tamil and English
11) Good Communication Skills.
12) Demonstrated knowledge in agriculture, fisheries, micro enterprises sector

**5. Translator**
To work in full partnership with the Caritas Internationals (CI) Livelihood Program Expatriate Advisor and the other staffs.

**Base Station:** Killinochchi

**Qualification & Experience:**

The post holder Report directly to the overall Program Manager / Coordinator. The post holder will undertaken the following activities.
1) Should have 2 years experience in interpreting / equivalent.
2) Good command in English (oral & written)
3) Good communication skills & ideally will also do some Teaching in English
4) Good team player.
5) Translate documents into Tamil or English as required.
6) Computer literacy Microsoft Word and Excel.
7) Post based in Killinochchi, with regular visits to Mullaitivu and Jaffna.

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

Interested candidates are encouraged to apply by submitting
1) Their curriculum Vitae,
2) A letter of motivation, and
3) Two non related referees Before 22 July 2005 at Caritas-Hudec, 14 Mathew's Road, Deogu Street, Jaffna. Please make sure to include a telephone contact with your submission.

---

## பிறந்த நாள் வாழ்த்து


திரு.திருமதி சிவரூபன் ஜெயலக்ஷ்மி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**செல்வன் சி.ஜெயருக்ஷன்**
தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று [14.07.2005] வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை கல்வி,செல்வம், வீரத்துடன் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

சுன்னாகம்.
வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா.
(37640) (39-16)

---

## மறக்க முடியாத 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 – 10 – 1957



மறைவு 14 – 07 – 1995

**அமரர் ச.வசந்தகுமார்** (காந்தி)
(முன்னாள் முகாமையாளர், பல நோ.கூ.சங்கம், திருநெல்வேலி)

ஆண்டுகள் பத்து சென்றாலும்
ஆறாது எமது துயர்!
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மெமோறியல் லேன்,
மானிப்பாய்.
மனைவி,மக்கள்
[நிஷாந், நிக்ஷன், நிலோஜினி, நிரோஜன்]
தகவல்: குடும்பத்தினர்.
(37638) (39-16)

---

## நாடகத்துறை சார்ந்தோருக்கும் ஆர்வலர்களுக்கும்
### ஓர் அரிய வாய்ப்பு!

செயல்திறன் மிக்க அரங்கச் செயலாளிகளை உருவாக்கும் திட்டம்

## அபிவிருத்திக்கான அரங்கப் பயிற்சி
## Theatre For Development Training

சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் அரங்கு இன்று முக்கியமானதொரு பங்கை வகிக்க ஆரம்பித்திருக்கிறது. அதற்கான ஆளணி தேவைப்படுகிறது.
இதனை உருவாக்குவதற்கான பயிற்சிகளை எமது நிறுவனம் ஆரம்பித்திருக்கிறது. நீங்களும் இப்பயிற்சியில் இணைந்து சமூக அபிவிருத்திக்கான தொழில்சார் அரங்கச் செயலாளி ஆகுங்கள்.

*பயிற்சியில் உள்ளடங்கியுள்ளவை*
- நடிகருக்கான அடிப்படைத்திறன் விருத்தி
- நாடகத் தயாரிப்பு
- நாடகம் எழுதுதல்
- பிரச்சினைப் பகுப்பாய்வு
- தெருவெளி அரங்கு
- பெண்கள் அரங்கு
- சிறுவர் அரங்கு
- சமூக ஆற்றுப்படுத்தல் அணிதிரட்டல்
- தலைமைத்துவம் மற்றும் குழுச் செயற்பாடு
- திட்டமிடல், திட்ட உருவாக்கல்
- உளசமூக மேம்பாட்டுக்கான அரங்கு
- திட்ட உருவாக்கம், முகாமைத்துவம்

வேண்டப்படும் தகுதிகள்
G.C.E. உயர்தரம் மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
நாடக அரங்கத்துறையில் முன்னனுபவம்/ ஆர்வம்
வயதெல்லை: 18 – 45
பயிற்சிக் காலம் : ஆறு மாதங்கள் [300 மணித்தியாலங்கள்]
பயிற்சி ஆரம்பம் : 01.08.2005
*நடைபெறும் பரீட்சையில் சித்தியடைவோருக்கு*
➡ பயிற்சி முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.
➡ சிறப்பாகத் தேர்ச்சியடைவோர் மாதாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் நிறுவனத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
விண்ணப்ப முடிவு திகதி : 20.07.2005
விண்ணப்பங்கள் யாவும் A4 அளவு வெள்ளைத்தாளில் சுயவிவரங்கள் தெளிவாக எழுதப்பட்டு *'மனிதவள மேம்பாட்டு உத்தியோகஸ்தர், செயல்திறன் அரங்க இயக்கம், அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி'* என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

**செயல்திறன் அரங்க இயக்கம்.**
**Active Theatre Movement.**
(சி-42019) (39-16)

# பொது நிகழ்வுகளின் நிழல்கள்




சர்வதேச புகைபொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் அண்மையில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் விழிப்புணர்வுக் கூட்டத்தை நடத்தியது. அதில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி ப.சுரேஷ்மோகன் உரையாற்றுவதை படத்தில் காணலாம். கூட்டத்திற்குத் தலைமை வகித்த சம்மேளனத்தின் தலைவர் சி.இராஜலிங்கம், செயலாளர் செ.குமாரசிங்கம், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் திருமதி சி.யோகேஸ்வரன் ஆகியோரும் பிரமுகர்களும் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.

(படம்:- வலி.தென்மேற்குச் செய்தியாளர்)




கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவு மாதர் அபிவிருத்தியினரின் தையல், மனையியல் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கண்காட்சியைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (படம்:- கரவெட்டிச் செய்தியாளர்)



'போரூட்' நிறுவனத்தின் 'சக்தி' அமைப்பினர் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சுன்னாகம் விழிப்புல வலுவற்றோர் நிலையமான வாழ்வகத்தில் சிரமதானத்தை மேற்கொண்டனர்.

'சக்தி' அமைப்பின் தலைவர் சி.சுரேசன் தலைமையில் அந்த அமைப்பின் உறுப்பினர்கள் சிரமதானப்பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (த)



புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இதில் மருந்தகம் அமைப்பதற்கான காணியை தமது பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக அன்பளிப்பாக வழங்கிய முத்துக்குமாரு செல்லப்பா அடிக்கல்லினை நட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். (த-13)

# வாசகர் திருமுகம்

## மாகாணசபையும் மனித உரிமை மீறலா?

வடக்கு - கிழக்கு மாகாணசபை 2005 பங்குனி மாதமளவில், வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகள், கீழுழைப்பு நிலையில் உள்ள பட்டதாரிகள் மூலம் நிரப்புதல் சம்பந்தமாக விண்ணப்பங்கள் கோரியிருந்தது. 31.05.2005 முடிவுத் திகதி என்றும் வேலையற்ற பட்டதாரிகள், கீழுழைப்புப் பட்டதாரிகள் அல்லது அதற்குச் சமமான தகைமைகள் கொண்டவர்களும் அத்தோடு வடக்கு - கிழக்கு மாகாணசபையில் பயிலுநர்களாக இணைக்கப்பட்டிருக்கும் பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம் என விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருபது (20) துறைசார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவிகட்கு விண்ணப்பிக்கலாம் எனவும் ஒவ்வொரு துறைக்கும் பொருத்தமான பட்டதாரிகள் தனித்தனியாக விண்ணப்பிக்கவேண்டும். ஒருவர் எத்தனை பதவிக்கும் விண்ணப்பிக்கலாம். ஒரு மணித்தியாலம் கொண்ட நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். பரீட்சைக் கட்டணம் ரூபா200 ஆகும். ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் அனுப்பினாலும் ஒரே பரீட்சை ஆனால் ஒவ்வொன்றும் ரூபா200 கட்டணம் செலுத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தது.

ஒவ்வொருவரும் சராசரியாக 4 அல்லது 5 விண்ணப்பங்கள் அனுப்பியிருப்பார்கள். வேலையற்ற பட்டதாரிகளாகிய நாங்கள் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் விளம்பரத்தை நம்பி நம்பிக்கையோடு விண்ணப்பித்திருந்தோம். 08.05.2005இல் நுண்ணறிவுப் பரீட்சை நடத்தப்பட்டது. நுண்ணறிவுப் பரீட்சை சிறிது கஷ்டமானதுதான். அதற்காக பயிலுநர் பட்டதாரிகள் பரீட்சை மிகக்கஷ்டமென்றும், கடினமான கணக்குகள் வந்ததாகவும், பொறியியல் கணிதம், கணக்கியல் போன்ற துறைகளில் கல்வி கற்றவர்களுக்குச் சார்பாக பரீட்சை வைக்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தி, பரீட்சையை ரத்துச்செய்து,மூப்பு அடிப்படையில் பதவிகளைத் தமக்கு வழங்கும்படி வடக்கு - கிழக்கு மாகாணசபையைக் கோரியிருந்தார்கள்.

பயிலுநர் பட்டதாரிகள் குற்றம் சுமத்தியது போல் பொறியியல் கணிதம், கணக்கியல் போன்ற துறைகளில் படித்தவர்களுக்கு 5ஆம் ஆண்டுபுலமைப்பரீட்சைக்கான கணக்குகள் பல்கலைக்கழகங்களில் கற்பிப்பதில்லை. நுண்ணறிவு வினாத்தாளில் வந்த கணக்குகள் (விவேகம்) 5ம் ஆண்டு புலமைப்பரீட்சைக் கணக்குகளிலும் சிறிது கஷ்டமானதாகும். விவேகமுள்ள படிக்காதவர்களும் மனதால் செய்யக் கூடியவை. பட்டதாரிப் பயிலுநர்களின் கோரிக்கையை ஏற்று வடக்கு - கிழக்கு மாகாணசபை தனது விளம்பரத்தில் குறிப்பிட்ட நிபந்தனையை புறந்தள்ளி விண்ணப்பித்த சகலருக்கும் நேர்முகப் பரீட்சை வைக்கப்பட்டது.

நான் 23.06.2005இல் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தேன். எனது தகைமையைப் பரீட்சிக்கும் போது 30.05.2004இற்கு முன்பு சித்தியடைந்தவர்களுக்குத்தான் பதவி வழங்கப்படும். நீர் 30.11.2004இல் சித்தியடைந்தபடியால். நீர் தேர்ந்தெடுக்கப்படமாட்டீர் என்றும் கூறப்பட்டது. வேலை கிடைக்காதவர்களுக்கு மட்டும் தாங்கள் பரீட்சைப்பெறுபேறு புள்ளிகளைக் கூறுவதாகவும் உமக்கு 200க்கு 162புள்ளிகள் எனவும் கூறப்பட்டது. பட்டதாரி பயிலுநர்களுக்கு கட்டாயம் வேலை வழங்கப்படல் வேண்டும் அவர்களையும் கீழுழைப்பு பட்டதாரிகளை மட்டும் விண்ணப்பிக்கும்படி வடக்கு - கிழக்கு மாகாணசபையினர் விண்ணப்பங்களைக் கோரியிருக்கலாம். அதனை விடுத்து வேலையற்ற பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம் என்று விளம்பரப்படுத்திவிட்டு 30.05.2004 இற்கு முன்பு சித்தியடைந்தவர்கள்தான் தேர்வுசெய்யப்படுவார்கள் என்று நேர்முகப்பரீட்சையில் கூறுவது மனித உரிமை மீறும்செயலாகும். வடக்கு - கிழக்கில் என்னைப் போன்று 1000 பேர் அளவில் 30.05.2004இக்குப் பின்பு சித்தியடைந்தவர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட 1000 ரூபா கட்டணமாகச் செலுத்தியிருந்தார்கள். பணத்தைச் செலுத்தி பரீட்சைக்குப் படித்து அலைந்து திரிந்து கஷ்டப்பட்டதெல்லாம் வீணாகிவிட்டது. எம்மை அலைக்கழித்து வேதனைக்கு உள்ளாக்கவேண்டும் என்ற வடக்கு - கிழக்கு மாகாணசபையின் செயற்பாடு மனிதஉரிமை மீறல் ஆகும்.

இனியும் வேலையற்ற பட்டதாரிகளை இளிச்சவாயர்களாக்கும் செயற்பாட்டில் இறங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தங்கள் நடுநிலமை தவறாத மேலான பத்திரிகையின் கடமையாகும்.

**அராலி.** **இ.ரமணன்**

## சேவை மூப்பு புறக்கணிப்பு

கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இல. 2005/04 க்கு இணங்க 06.10.1994 அன்று 20 புள்ளிகள் பெற்ற ஆசிரியர்களும் அதே நேரத்தில் அத்தினத்தில் 36 புள்ளிகள் பெற்ற ஆசிரியர்களும் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1 க்கு 06.10.1994 இல் பதவி உயர்த்தப்படும் போது ஆசிரிய சேவை வகுப்பு 1 இன் சம்பளத் திட்டத்தின் தொடக்க நிலையில் வைக்கப்படுவர். இந்நிலையில் 20புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் சேவைமூப்பு அடிப்படையில் புறக்கணிக்கப்படுகிறார்கள். இக்குறைபாட்டை நீக்க இலங்கை ஆசிரியசேவை வகுப்பு 3 : தரம் 2, வகுப்பு 3: தரம் 1, வகுப்பு 2 : தரம் 2 , வகுப்பு 2 : தரம் 1 க்கு இடம் பெற்ற இலங்கை ஆசிரிய சேவை உள்ளீர்ப்பு நடைமுறையினை இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1 க்கும் பின்பற்ற வேண்டும் என்பதை ஆசிரியர் சங்கங்களும் கல்வி அமைச்சின் செயலாளரும் கருத்தில் கொள்வீர்களா?.

**துரை. சத்தியசீலன், க. கதிர்** (பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பில்).

# படுகொலைகளைக் கண்டித்து கிழக்கு பல்கலையில் ஆர்ப்பாட்டம்

ஏறாவூர் , ஜூலை14

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களைக் கண்டித்தும், ஆழிப் பேரலை மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கோரியும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை வந்தாறு மூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகம் முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம் பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள், கல்விசார பணியாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முற்பகல் 10 மணிமுதல் 11 மணிவரை சுமார் ஒருமணி நேரம் இடம்பெற்ற இந்தப் பேரணியில் கலந்துகொண்ட மாணவர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் எழுதப்பட்டிருந்த வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளையும், பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

பல்கலைக்கழக நுழைவாயிலில் இடம்பெற்ற மறியல்போராட்டத்தின் விளைவாக மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான நெடுஞ்சாலையில் சிறிதுநேரம் போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டிருந்தன. எவ்வித அசம்பாவிதங்களுமின்றி அமைதியான முறையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது. இதனையொட்டி பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்ட பேரணியைத் தொடர்ந்து பல்கலைக்கழக முன்றிலில் பொதுக் கூட்டமொன்றும் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, விரிவுரையாளர் கே.பாலசுகுமார், பதிவாளர் ஏ.டி.ஹரீஸ் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து பிரேரணை ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. (க-3)

## தங்கச் சங்கிலி அபகரிப்பு

தொல்புரம்,ஜூலை14

சித்தன்கேணிச் சிவன் கோயில் தேர் உற்சவத்திற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய பெண் ஒருவரின் தங்கச்சங்கிலி சைக்கிளில் வந்த இளைஞர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 11ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த தாமோ தரம்பிள்ளை மோகனா என்ற பெண்ணே சங்கிலியைப் பறிகொடுத்தார்.

பிரஸ்தாப பெண்ணும் அவரது மாமியாரும் கோயிலிலிருந்து வீடு வந்து கொண்டிருந்த நேரம் வீதியில் ஆள் நடமாட்டம் குறைவாக இருந்த தாகக் கூறப்பட்டது. இவர்களைப் பின் தொடர்ந்து சைக்கிளில் வந்த இளைஞர்கள் பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த இரண்டு பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடினர் எனவும் கூறப்பட்டது. (த-119)

## கூட்டம்

தென்மராட்சி,ஜூலை14

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் வேலைத்திட்டங்கள் தொடர்பான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசசெயலகத் திட்டமிடல் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கூட்டத்தில் வேலை திட்டங்களை மேற்கொள்ளவுள்ள நிறைவேற்று முகவர்களைக் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் 92 வேலைத் திட்டங்களுக்கு 50 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-117)


# Study in India

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து
பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

A/L சித்தியடைந்த மாணவர்களும், 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

- Garden City College Affiliated to Bangalore University
- SSM College of Engineering affiliated to Anna Engineering University
- Muthayammal Art and Science College affiliated to Periyar University
- Bishop Heber College affiliated to Bharathidasan University

**Courses**

• B.E. Information Technology, • B.E. Computer Science and Engineering,
• B.E. Electronics and Communication Engineering, • B.E. Mechanical Engineering,
• B.Sc. Information Technology, • B.Sc. Computer Technology,
• B.Sc. Apparel and Fashion Technology, • M.S.C. Information Technology
• B.Sc. (Computer Science), • B.Sc. (Fashion & Apparel Design),
• B.Sc. (Microbiology), • B.Sc. (Genetics), • B.Sc. (Biotechnology),
• BCA. (Bachelor of Computer Applicants), • BBM. (Bachelor of Business Management),
• BHM. (Bachelor of Hotel Management), • B.A. (Journalism), • B.Com (Computers) • B.Sc. Maths,
• B.Sc. Phys • B.Sc. Electronics • B.Sc. Chemistry • B.Sc. Computer Science

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical Collegeல் சேர்ந்து 3 வருட Diplomaவை பூர்த்திசெய்து, மேலும்3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.

- ஆண்கள் - பெண்களிற்கு தனியான விடுதி வசதிகள்
- Student Visa எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்
- கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

2005ல் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் Pending Results உடன் இவ்வருடமே கல்லூரிகளில் சேர்ந்து பாடநெறிகளை தொடர முடியும். இதனால் மாணவர்கள் ஒரு வருடத்தை சேமிக்க முடியும்

அனேகமான கல்லூரிகள் யூலைமாதம் இரண்டாம் கிழமை தமது பாட நெறிகளை தொடக்கவிருப்பதால், உடனடியாக தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**MBBS** இலங்கை Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட Crimea Medical Institute - University (Ukraine) இல் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது - A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு **Call 0777 - 767818 / (011) 4512591**

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06.

St.Ads&Prints


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியையான திருமதி உமா சிவகுமார் அவர்களின் பாசமிகு தந்தை

### தம்பு இராசரத்தினம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் உறவினர்களுக்கும் சுற்றத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
ஆளணியினர்.

(37621) (39-14-15-42)


# பற்றரிகள்




ரேடியோ மற்றும் டோர்ச் பற்றரிகள்

மீள் மின்னேற்றககூடிய உறையுடைய லீட்அஸிட் கொண்ட பற்றரிகள் UPS மற்றும், வீட்டு மின்பாவனைக்கு

பற்றரிகள் மற்றும் பட்டன் கலங்கள் கெமரா,கைக்கடிகாரம், Hearing aids, கல்குலேட்டர்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ரிமோட் கன்ட்ரோல்கள்

Ni-cd, Ni-MH & Li-ion பற்றரிகள் மற்றும் பற்றரி தொகுதிகள் கையடக்க தொலைபேசிகள், கோர்ட்லஸ் தொலைபேசிகள், லப்டொப்ஸ்,வீடியோ கெமராக்கள் மற்றும் மின்னியல் உபகரணங்களுக்கு உகந்தது.

**மக்னட் செல்ஸ் பிரைவெட் லிமிடட்.**
பற்றரி உலகில் விசேடமானவர்கள்

பிரதான காரியாலயம்: 07, மாயா அவனியூ, கொழும்பு 06. தொலைபேசி: 2591456 பக்ஸ்: 2594755
காட்சியறை: வகி பிளாசா,செ.அந்தனிஸ் மாவத்தை, கொழும்பு 03. தொலைபேசி: 2574675

Sellingway Ads.

உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விசேடசலுகை

**லண்டனுக்கான 5 Kg பொதிக்கு**
**1 Kg க்கான கட்டணம் 500/=**

# திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253


# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உறவுக்காக
27-05-1978

மண்ணுக்காக
14-07-1995



ஆசைகள் பல விதைத்து
அன்புடனே பெற்ற மகன்
வாலிபம் வந்தவுடன் வாழ்க்கையினை மாற்றிக் கொண்டாய்
உறவுகள் பல சேர்ந்து
உனக்கெனவே வாழ்ந்திருக்க - நீயோ
நம் தமிழினம் தவிப்பதனை கொதிப்புடன் பார்த்திருந்து
தாய் மண்தனை கறையின்றிக் கைப்பற்ற
களத்தினிலும் குதித்து விட்டாய்
கருவி ஏந்திய வீரனாய்
களமாடி நின்றிருந்தாய் - பின்
உன்னையே நெய்யாக்கி
புலிப்பாய்ச்சலில் பெருவெற்றி தந்துவிட்டு
இன்றோடு நீ சென்று
ஈரைந்து வருடங்கள்
உருண்டோடிப் போனாலும்
இதயத்தில் நினைவுகள் பசுமையாய்த்தான் தெரிகிறது
மரணத்தைச் சுமந்துகொண்டு
எதிரியின் முடிவிற்காய் மலர்வுடன் சென்றவனே!
தலைவனின் உணர்விற்கும் கனவிற்கும் உயிர்கொடுத்து
மண்ணிற்கு உனைக் கொடுத்தவனே!
இன்று நீ மடிந்திருந்தாலும் - நாளை
மலர்கின்ற ஈழத்தின் மனங்களிலே நீ இருப்பாய்!
புலரும் விடியலின் ஒளிக்கீற்றாய்த் தானிருப்பாய் - அதுபோல்
சங்கினுள் சங்கமித்த ஆழ்கடல் ஓசையாய்
உன் நினைவலைகள் எம் நெஞ்சோடுதானிருக்கும்.

## வீரவேங்கை மன்னன்
## லோகநாதன் கோகுலன் / கவாஸ்கர்

58/11, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(37683) (42.14.15)

# அரசை இனியும் நம்புவதால் பயனில்லை; போரே தமிழரின் அமைதிக்கு வழிசெய்யும்

## திருமலைச் சம்பவத்துக்கு முல்லை. எழுச்சிப் பேரவை கண்டனம்

முல்லைத்தீவு,ஜூலை14

அரசை இனியும் நம்புவதால், எந்தப் பயனும் ஏற்படாது. எனவே, தமிழர்கள் மீண்டும் போர் செய்வதே தமிழினத்தின் அமைதிக்கு வழிசெய்யும். எனவே, இதற்கு அனைவரும் தயாராகவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறது முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை.

திருகோணமலை உப்புவெளியில் போராளிகள் மூவரும் பொதுமகன் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளியிட்டிருக்கின்ற கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதில், மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா அரசின் அமைதியால் போர்த்தப்பட்ட முகத்திரை 10.07.2005ஆம் நாள் அதிகாலை உப்புவெளிப் பகுதியில் நடத்தப்பட்ட போராளிகள் மீதான தாக்குதலால், கிழித்து எறியப்பட்டது.

கூலிப்படைகள் மூலம் போராளிகளைக் கொன்றுவந்த சிங்கள அரசு முகத்துக்கு கறுப்புத்துணி கட்டிவந்து போராளிகளைக் கொன்றுவிட்டுச் சென்ற சம்பவத்தை இனியும் பொறுக்க முடியாது. அமைதி, போர் நிறுத்தம் என்ற காலங்களில் சிங்கள அரசின் இது போன்ற அடாவடிகளால் நாம் எத்தனையோ போராளிகளை இழந்துவிட்டோம். எத்தனையோ தமிழ் மக்களை இழந்துவிட்டோம். இத்தனை இழப்புக்களாலும் எம் இனத்துக்கு விடிவு கிடைக்குமானால் இழப்புக்களைத் தியாக அன்பளிப்பு என்று கூறலாம். ஆனால், சிங்கள அரசு ஈழவிடுதலையின் முறியடிப்பதாகவே இதனைக் கருதுகிறது.

எங்கள் போராளிகளைஅமைதி விலங்கினால் பூட்ட முடியாது. கையில் ஆயுதமின்றி கழுத்தில் நஞ்சின்றி அமைதி விலங்கினால் பூட்டிய போராளிகளைக் கொல்வது வீரமல்ல. இனி அவ்வாறு வீழவும் முடியாது. எங்கள் தேசியத்தலைவர் இனியும் இவ்வாறு போராளிகளின் குருதி சிந்தப் பொறுத்திருப்பார் என்று கூறமுடியாது.

இரு போராளிகள் உட்பட, துணைப் படை வீரர்களுடன் நால்வரை இன்று நாம் இழந்து நிற்கின்றோம். எந்தச் சந்தேகமும் இல்லாமல் ஸ்ரீலங்காவின் சிங்களப் படைகளே இக்கொடூரத்தைச் செய்ததால் சிங்கள அரசின் அமைதிக்காலத்தை இனியும் ஏற்பதற்கில்லை.

இந்தக் கோரத்தின் பின் எம்மால் நேசிக்க வேண்டியது போரைத் தவிர வேறு யாதுமில்லை. போர்தான் எங்கள் அமைதிக்கு வழிசெய்யும். அது தவிர சிங்கள அரசு கூறும் அமைதி அழிவுக்கே வழிவகுக்கும் அதனால், போர்க் குணங்கொண்டு போர் செய்து எம் இறைமையைத்தீர்மானிப்போம்.

உப்புவெளி, செல்வநாயகபுர படுகொலை அமைதிக்கு வந்த சாவுமணி. இனியும் சிங்கள அரசை நம்பமுடியாது. நம்பினால் மேலும் போராளிகளை இழப்போம். ஆதலால், அனைவரும் போருக்குத் தயாராகுங்கள். போரைத் தவிர வேறு வழியில்லையென்பதை எதிரி உப்புவெளியில் சீராக உணர்த்திவிட்டான். எங்கள் இனத்தின் போராளிகளின் உதிரம் எந்தவேளையிலும், அநியாயமாகச் சிந்தக் கூடாது. வீர வரலாற்றுடனும் ஈழவிடு தலைக்காகவும் அதை அர்ப்பணிப்போம்.

இந்தச் செய்திகூட அரசுக்குவிடும் எச்சரிக்கையாக இருக்கின்றது. இறுதியானதும் உறுதியானதுமான செய்தியாக இருக்குமென நம்புகின்றோம். தானைத் தலைவன் பொறுத்திருக்கமாட்டான். அந்தத் தலைவனுக்குக் கரம் மட்டுமல்ல உயிரையும் கொடுப்போம். அமைதியென்று எம்மினத்தை அழிக்கமுடியாது. எழுவோம் நாம் எதிரிகளை அழிப்போம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(த)

## ஓய்வுபெற்ற அதிபருக்கு பிரிவுபசார விழா

முழங்காவில்,ஜூலை14

பல்லவராயன் கட்டு அ.த.க.பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி இ.விஜய நாதனுக்கு பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் த.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பூநகரிக் கோட்டக்கல்வி அலுவலர் தி.கணபதிப்பிள்ளை கலந்து கொண்டார்.

இங்கு உரை நிகழ்த்திய பூநகரிக் கோட்ட அலுவலர் தி.கணபதிப்பிள்ளை பாடசாலையின் வளர்ச்சியை முதன்மையாகக் கொண்டு ஓய்வுபெற்ற அதிபர் திருமதி இராசேஸ்வரி விஜயநாதன் கடமையாற்றினார்.

பாடசாலைக்குப்புதிய கட்டடங்கள் அமைத்ததுடன், பல அபிவிருத்தி வேலைகளையும் முன்னெடுத்தார். மாணவர் கல்வியில் அக்கறை செலுத்தி, மாணவர் கல்வி முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார் - என்று பாராட்டிப் பேசினார்.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-323)

# போரியல் விதியினை உதாசீனம் செய்யும் படைகளின் அடாவடித்தனத்தை அனுமதிக்க முடியாது

## கிளிநொச்சி எழுச்சிப் பேரவை அறிக்கை

கிளிநொச்சி,ஜூலை14

எதற்கும் தயார் என்ற நிலையில் பயிற்சி பெற்ற மக்களாகிய நாம் எதிரியை மீண்டும் ஆயுதமுனையில் எதிர்கொள்ளத் தயாரகிவிட்டோம்.

இவ்வாறு திருமலைச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சிறீலங்காப் படைகளின் திட்டமிட்ட இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையினைத் தொடர்ந்தும் அங்கீகரிக்கமாட்டோம். மக்களின் காவலர்களான போராளிகளைத் தொடர்ந்து அழிக்கும் செயலானது எம்மைக் கடுஞ்சீற்ற மடையச் செய்துள்ளது. பட்டப்பகலில் வந்த முகமூடிகளான சிறீலங்காவின் அராஜகப் படைகளின் ஈனத்தனத்தைத் தமிழீழத் தலைநகரான திருமலையில் தொடரவிடலாமா?

இலட்சியப்பற்றுள்ள ஆயுதமேந்திய போராளிகள் போர்நிறுத்தத்தினை மதித்து நிராயுதபாணிகளாச் செயற்படும்போது, போரியல் விதியினை உதாசீனம் செய்யும் சிங்களப் படைகளும் அதன் அடிவருடிகளும் திட்டமிட்டுச்செய்த அடாவடித்தனத்தினை அனுமதிக்கமுடியாது. எமது தளபதியான லெப். கேணல் டிக்கான், இரண்டாம் லெப்டினன் இளம்புலி உள்ளிட்ட நால்வருக்கும் வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நீங்கள் அழிக்கப்பட்ட இடத்திலிருந்து எதிரிக்குச் சமாதிகட்டத் தயாராக இருக்கின்றோம். திருமலைவாழ் எம் தமிழ் உறவுகளே! உங்களோடு இணைந்து எதிரிகளை விரட்டத்தயாராக இருக்கின்றோம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

அமைதி ஒப்பந்தத்தினை அத்துமீறும் சிங்களப்படைகளின் கொடூரத்தைத் தட்டிக் கேட்கச் சர்வதேசமே தயாராக இரு!

இன அழிப்பு அடக்குமுறை தொடரும்போது வாழ்வியலுக்காகப் போராடும் நாம் பொறுமைகாக்க முடியாது! அரசே! உனது வெறித்தனத்தை நிறுத்தாவிட்டால் காற்றிடைப்பட்ட பஞ்சு போல உம் படைகள் எறியப்படுவார்.

எம் தலைவன் ஆணைக்காகக் காத்திருக்கின்றோம். தலைவன் சுட்டும் திசை நோக்கிப் புயலென அடிப்போம். பகைவனே உன் அடாவடித்தனத்தை நிறுத்து! உன் கபடத்தனத்தை உடன் கைவிடு! எம்மனங்கள் கொதிக்கின்றன. கண்கள் சிவக்கின்றன. எம் தலைவா! நாம் வளர்த்த போராளிகள் படுகொலை செய்யப்படும்போது பொறுமை காப்பதா? வேண்டவே வேண்டாம்.

நிலங்களை மீட்டு எமது தாயக எல்லையை உறுதிப்படுத்தும் புனிதப்போருக்கு அனுமதி தாருங்கள். தமிழீழத் தலைநகரில் புத்தர் சிலை முளைத்தது. வன்பறிப்பாளர் நடவடிக்கை தொடர்கின்றது. இதனை உடைத்தெறியப் புறப்படத் தயாராகிவிட்டோம் - என்றுள்ளது. (த-202)




# உலகவங்கியின் உதவியுடன் முல்லைத்தீவில் வீடமைப்பு

முல்லைத்தீவு,ஜூலை14

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 516 குடும்பங்களுக்கென வடக்கு - கிழக்கு வீடமைப்புத்திட்டத்தினால் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நிதியினை உலகவங்கி வழங்கியுள்ளது. புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்பங்களுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்பங்களுக்கும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்பங்களுக்கும் பாண்டியன் குளம் பிரதேச செயலர் பிரிவில் 115 குடும்பங்களுக்கும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 101 குடும்பங்களுக்கும் வீடுகள்-அமைக்கப்பட்டன. (த-13)

# திலீபன் மருத்துவமனையில் ஜூன் மாதம் 18ஆயிரத்து 500பேருக்குச் சிகிச்சை

கிளிநொச்சி,ஜூலை14

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் மருத்துவ முகாமில் கடந்த ஜூன் மாதம் 18ஆயிரத்து 492 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இது தொடர்பான புள்ளிவிவர அறிக்கை ஒன்றை மருத்துவ சேவையின் நடுவப்பணியகம் வெளியிட்டுள்ளது.

புள்ளிவிவர அறிக்கையின்படி மாங்குளத்தில் ஆயிரத்து 127 பேரும் ஐயனார் குளத்தில் 724பேரும் கற்சிலைமடுவில் 3 ஆயிரத்து 176 பேரும் அளம்பிலில் ஆயிரத்து 657 பேரும் பூநகரியில் 931 பேரும் -

ஆழியவளையில் ஆயிரத்து 230 பேரும் நைனாமடுவில் 452 பேரும் மன்னாரில் ஆயிரத்து 113பேரும் புங்குடுதீவில் ஆயிரத்து 254 பேரும் நவ்வியில் 304 பேரும்-

பண்சேனையில் 615பேரும் பாரதிபுரத்தில் 441 பேரும் கதிரவெளியில் 853பேரும் பிரமந்தனாறில் ஆயிரத்து 775 பேரும் நடமாடும் மருத்துவ சேவை மூலம் 2ஆயிரத்து 840 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(த-202)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் கணனிப் பயிற்சி நெறி

பூநகரி,ஜூலை14

கிளிநொச்சி மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்தும் பொருட்டு கணனிக் கற்கை நெறியின் உபபிரிவு ஒன்றை பளைப் பிரதேசத்தில் ஆரம்பித்துள்ளது.

கடந்த 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கற்கை நெறியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

(த-291-204)



வெள்ளாங்குளம் சேவாலங்கா முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா கடந்த மாத இறுதிப்பகுதியில் இடம்பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் கொடிகள் ஏற்றப்படுகின்ற காட்சியைப் படத்தில் காணலாம். (த-415)

# புதுக்குடியிருப்பு - முள்ளியவளை வீதியில் பஸ்சேவையை அதிகரிக்கக் கோரிக்கை!

கிளிநொச்சி,ஜூலை14

புதுக்குடியிருப்பு - முள்ளியவளை வீதியில் பயணிகள் பயணிப்பதற்குப் போதிய பஸ் வசதிகள் இல்லையென்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியூடாக வெளிமாவட்டத்திற்கும் பிரசித்திபெற்ற வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கும் பயணிகள் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

ஆனால், நண்பகலுக்கு முன்னர் இவ்வீதியூடாகப் பயணிகள் பஸ் சேவை குறைவாகக் காணப்படுவதால், மக்கள் தமது பயணங்களை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். எனவே, இந்த வீதியூடான பஸ்சேவையை அதிகரிக்குமாறு பொதுமக்கள் கேட்டிருக்கின்றனர். (த-13)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

தனிப்பாவனையிலிருந்த JR XXXX தொடர் இலக்கமுடைய TVS F2 (FIERO) நீலநிறமான மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. (FULL INSURANCE WITH PASSENGERS) தொடர்புகளுக்கு: R.காண்டீபன், இல.1, மகாத்மா லேன், நெல்லியடி. T.P.:0777 779975. (37704)

### வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 011 4613157 (மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும்). (37614)

கோண்டாவில் கிழக்கு, இருபாலை றோட், வன்னியசிங்கம் லேனில் 3 பரப்பு 2 குழி காணியுடன் கூடிய வடக்கு வாசல் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: மேற்படி விலாசத்தில் வியாழன், வெள்ளி நேரில். தொலைபேசி: 077 3053063. (37695)

### தவறிவிட்டது

3ஆம் கட்டை ஒழுங்கை, காங்கேசன் துறை வீதி, கொக்குவிலைச் சேர்ந்த கந்த ... ர் இலட்சுமண சர்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல. 513203888V, சாரதி அனுமதி அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை முகமாலை இராணுவச் சோதனைச் சாவடிக்கும் பளைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறப்பட்ட விலாசத்தில் அல்லது இலங்கை வங்கி, திருநெல்வேலியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (37673)

### கடை விற்பனைக்கு

வீதிச் சான்றிதழ் பெற்ற கடை. தொடர்பு: இல. 325, 'தியாகு கலைக்கூடம்' பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P.: 222 6469. (37535)


# NEW SCIENCE

| HALL | COLLEGE |
|---|---|
| **DAY CLASS**<br>★ அலகு ரீதியான மீட்டல்<br>திங்கள் - வெள்ளி<br>8.00 - 9.30 | **2006**<br>★ வெப்பவியல் (வாயுவிரிவு)<br>சனி, ஞாயிறு<br>6.15 - 7.15 |
| **Theary**<br>★ ஒளியியல்<br>திங்கள் - புதன்<br>11.15 - 12.15 | **காந்தப்புலம்**<br>பிரிவு - 1 சனி, ஞாயிறு 8.00 - 9.00<br>பிரிவு - 2 சனி, ஞாயிறு 12.00 - 1.00 |
| **By: R.குகன்** | **2007**<br>சுழற்சி இயக்கம்<br>பிரிவு - 1 7.00 - 8.00<br>பிரிவு - 2 10.00 - 11.00 |

(37664) (24-14-15)


## B.Th. பட்டமளிப்பு விழா

இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் கற்று செரம்பூர் பல்கலைக்கழகத்தினூடாக B.Th. பட்டம் பெற்ற தென்னிந்திய திருச்சபை யாழ். பேராய குருமார்களுக்கு B.Th. பட்டச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை 15-07-2005 மாலை 4.30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.*

(37686)(46-14-15-24)

## 45ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 21 - 09 - 1984



மண்ணின் மடியில் 31 - 05 - 2005

# கந்தசாமி காண்டீபன்

(கலைமகள் விளையாட்டுக்கழகப் பொருளாளர்)

இன்பகரமான பொழுதுகளைத் திருடிச் சென்ற
துன்பங்களை நினைத்து அன்று எம் ஆவி துடித்தது!
எம் வாழ்வில் ஆத்மா நிலைக்க ஓடியும்
உன்னை வழிமறிக்க முடியவில்லை
இன்று நினைக்கையில் எங்கள் நெஞ்சு வலிக்குது!
கூடிப்பழகிவிட்ட எங்கள் உதிரமே - உன்னை
மறந்துவிட நினைப்போமா? மறுபடியும் வருவாயோ?

பிரிவால் துடிக்கும்:
பொ.அப்புத்துரை,
பொ.சுதர்சன்.

*கச்சாய் தெற்கு, கொடிகாமம்.*

(சி/42042) (24-14-15)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பத்மநாதன் (கிச்சி மாஸ்ரர்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி - பத்மநாதன் அவர்கள் 10-07-2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - விசாலாட்சி தம்பதியரின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னபூபதியின் அன்புக் கணவரும் ஈஸ்வரதேவி (கொழும்பு), உமைபாலன் (பிரான்ஸ்), தேவகி (அமெரிக்கா), இரகுநாதன், நிமலன் (கனடா), பவானி (அளவெட்டி), ரவீந்திரன் (கனடா), ஐங்கரன் (கனடா), தாரணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாதசுந்தரம் (கொழும்பு), சத்தியதேவி (பிரான்ஸ்), சிறிக்குமார் (அமெரிக்கா), சிவமோகினி, சண்முகப்பிரியா, காலஞ்சென்ற குகதாஸ் மற்றும் வசந்தி (கனடா), சயிந்தன் (கனடா) ஆகியோரின் மாமனும் யதுகுலன்,யாதவன், ஆரதி, சயன், தரங்கினி, தேனின்பன், சகானா, மோசிகீரன், ரசிகரன், வாதுலன், தேனுஜா, அக்மிதா, அத்மிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-07-2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

*அளவெட்டி வடக்கு, அளவெட்டி.*

(37693) (24-14-15)


# நல்ல தொழில் வாய்ப்புகளைப் பெற CIMA சிறந்த வழிகாட்டியாகும்.

CIMA ஒரு பட்டப்படிப்பிற்குச் சமமான கல்வித்தகைமையைக் கொண்டதாகும். இது மாணவர்களுக்கு தொழிற்துறை சார் நிபுணத்துவத்தை வழங்குவதால் அவர்கள் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சிறந்த தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மேலும் CIMA மாணவர்களிடம் இருக்கும் தகைமைக்கு மேலதிகமாக பல்வேறு வகையான திறமைகளையும், பயிற்சிகளையும் அவர்களுக்கு வழங்குகிறது. அத்துடன் மாணவர்களுக்கென கடன் திட்டத்தையும் அது கொண்டுள்ளது. அனுமதிகள் இப்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

அழையுங்கள் : 2503880

CIMA

LEO BURNETT

# கிரிக்கெட் போட்டி

வலி.வடக்கு,ஜூலை14

வடமராட்சி கிரிக்கெட் கழகத்தினர் வடமராட்சிப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியொன்றை எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடத்தவுள்ளனர்.

இப்போட்டிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆகியன கலந்துகொள்ளவுள்ளன. (த-86)

## புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 16 - விடைகள்

**நேற்றைய உதயனில் வெளியான ஐந்தாம் தரத்துக்குரிய புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 16 இற்கான விடைகள் வருமாறு**

### வினாத்தாள் I

| | | |
|---|---|---|
| (01) E | (02) E | (03) C |
| (04) H | (05) வசந்தி | (06) கூறமுடியாது |
| (07)வயோதிபன் | (08) விருகு | (09) இ |
| (10) 3 | (11) 2 | (12) 2 |
| (13) 3 | (14) 1 | (15) 10 |
| (16) 8 | (17) 3 | (18) 3 |
| (19) 2 | (20) 1 | (21) 12 |
| (22) 15 | (23) 3 | (24) 4 |
| (25) 2 | (26) 3 | (27) முன்நோக்கி |
| (28) 204 | (29) 2 | (30) 1 |
| (31) 3 | (32) 4 | (33) 2 |
| (34) 4 | (35) 1 | (36) 3 |
| (37) 3 | (38) 4 | (39) சித்திரா |
| (40) 3 | | |

### வினாத்தாள் II

**1.**

(1) இயற்கையின் அழகில்/ இயற்கை அழகின் சிரிப்பில்

| | |
|---|---|
| (2) புதுயுகம் | (3) கீதம் |
| (4) குழந்தை | (5) அழகு |
| (6) இன்பம் | (7) இயற்கை |
| (8) இல்லை | (9) அழகு |
| (10) நண்பர்களே | (11) நண்பனே |
| (12) நான் | (13) பாடிடுவேன் |
| (14) பேதம் | (15) படை |
| (16) நாங்கள் | (17) எதிர்காலம் |

**2.**

| | | |
|---|---|---|
| (1) 3 | (2) 4 | (3) 3 |
| (4) 1 | (5) 3 | |

**3.**

| | | | |
|---|---|---|---|
| (1) தரம் 1, 3 | (2) புதன் | (3) தரம் 5 | (4) தரம் 1 |
| (5) 174 | (6) 50 | (7) 372 | |

**4.**

| | | |
|---|---|---|
| (1) இருவரும் | (2) செல்லும் | (3) நடந்தனர் |
| (4) அயலில் | (5) இருந்தது | (6) சல சல |
| (7) பக்கத்திலும் | (8) சிறிய | (9) வரிசையாக |

**5.**

| | | |
|---|---|---|
| (1) சவர்க்காரம் | (2) சீருடை | (3) மாதம் |
| (4) வங்கி | (5) வாரம் | |

**6.**

| | | |
|---|---|---|
| (1) 24 | (2) 6 ரூபா | (3) வடக்கு |
| (4) 35 ரூபா | (5) ரூபா 17.75 | |

**7.**

(1) பாகற்காய்
(2) புயற்காற்று வீச மரங்கள் முறிந்து விழுந்தன
(3) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா
(4) வெண்மை + தாமரை
(5) மைதானம்/விளையாட்டு மைதானம்

**8.**

| | | |
|---|---|---|
| (1) ஓராயன் | (2) சிறுகரடி | (3) கார்த்திகை |
| (4) தென்சிலுவை | (5) சிம்மம் | (6) பெருங்கரடி |

**9.**

| | |
|---|---|
| (1) துறப்பணம் | (2) தூக்குக் குண்டு |
| (3) சீவுளி | (5) மரச்சுத்தியல் |

**10.**

| | |
|---|---|
| (1) House | (2) Bed |
| (3) Bicycle | (4) Bottle |

**11.**

| | |
|---|---|
| (1) அம்மா | (2) தாத்தா |
| (3) அம்ப | (4) பொல்கஸ |

**12.**

| | |
|---|---|
| (1) உயரம் பாய்தல் | (2) ஈட்டி எறிதல் |
| (3) தடைதாண்டல் ஓட்டம் | |

**13.**

| | |
|---|---|
| (1) திரிகைக்கல்/திரிகை | (2) கப்பி |
| (3) பாரந்தூக்கி/கிறேன் | |

**14.**

பொருத்தமான வசனங்கள்

### புள்ளித்திட்டம்

**வினாத்தாள் I**

40 x 2½ = 100 புள்ளிகள்

**வினாத்தாள் II**

| | | | |
|---|---|---|---|
| (01) 17 புள்ளிகள் | (02) 5 புள்ளிகள் | (03) 13 புள்ளிகள் | (04) 9 புள்ளிகள் |
| (05) 5 புள்ளிகள் | (06) 10 புள்ளிகள் | (07) 5 புள்ளிகள் | (08) 6 புள்ளிகள் |
| (09) 4 புள்ளிகள் | (10) 4 புள்ளிகள் | (11) 4 புள்ளிகள் | (12) 3 புள்ளிகள் |
| (13) 3 புள்ளிகள் | (14) 12 புள்ளிகள் | | 100 புள்ளிகள் |

# மாகாண மட்ட சதுரங்கப் போட்டியில் வட்டக்கச்சி ம.வி.அணி சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஜூலை14

வடக்கு-கிழக்கு மாகாணமட்டப் பாடசாலைகளுக்கிடையேயான சதுரங்கப் போட்டியில் 15 வயதுப் பெண்கள் பிரிவில் கிளி. வட்டக்கச்சி மகா வித்தியாலய அணி சம்பியனானது.

கடந்த 9ஆம் திகதி வவுனியா சி.சி.த.க. பாடசாலையில் மேற்படி போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியானது 19வயது ஆண்,பெண், 15வயது ஆண்,பெண் அணிகள் என நான்கு அணிகளாக நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்தும் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திலிருந்தும் நான்கு அணிகள் தெரிவாகி மாகாண மட்டப் போட்டிகளில் பங்குகொண்டன.

இவற்றுள் 15வயது பெண்கள் பிரிவு அணி மாகாண மட்டச் சம்பியனானது. 15 வயது ஆண்கள் பிரிவு அணி 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இந்த இரு அணிகளும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குகொள்ளும் தகைமையைப் பெற்றுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு சதுரங்கப் போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டது. அவ் ஆண்டிலேயே வட்டக்கச்சி ம.வி. 15வயது பெண்கள்அணி மாகாணத்தில் தெரிவாகித் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

(த-405)



வடக்கு-கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையேயான சதுரங்கப் போட்டியில் 15வயதுப் பெண்கள் பிரிவில் வட்டக்கச்சி ம.வி.அணி சம்பியனானது.

வட்டக்கச்சி ம.வி.அணி மாணவிகள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, எஸ்.அருணகிரி ஆகியோருடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படங்கள்:- வட்டக்கச்சிச் செய்தியாளர்)

# தேசிய மட்ட உயரம் பாய்தலில் சுண்டுக்குளி மாணவி மூன்றாமிடம்

கரவெட்டி,ஜூலை14

அகில இலங்கை ரீதியில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட இளையோருக்கான தேசிய தடகளப் போட்டியில் உயரம் பாய்தலில் யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி மூன்றாம் இடத்தைப் பெற்றார். கடந்த 9 ஆம் திகதி இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

அரியாலையைச் சொந்த இடமாகக் கொண்ட யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான வி.கஜிதா மேற்படி போட்டியில் உயரம் பாய்தலில் 3 ஆம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

இவர் 1.51 மீற்றர் உயரம் பாய்ந்து மேற்படி வெற்றி இடத்தை அடைந்துள்ளார்.

(த-70-203)

## விளையாட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை14

வலிகாமம் வடக்குப் பிரதேச சபை பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசசபைச் செயலாளர் திருமதி ஸ்ரீ மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராஜாவும், கௌரவவிருந்தினராக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரனும் கலந்துகொள்வர். (த-202)

## தாச்சிப் போட்டி

கைதடி,ஜூலை14

யாழ்.மாவட்ட தாச்சி சங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் தனது மைதானத்தில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொக்குவில் வராகி வி.கவும் இணுவில் அண்ணா வி.கவும் மோதுகின்றன. (த-72- 203)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் 19 வயதுக்கு கீழ்ப்பட்ட உடற்பயிற்சி அணியினர் கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்ட மட்டம் ஆகிய மூன்று மட்டங்களிலும் முதலாவது இடத்தைப் பெற்று கடந்த 7ஆம் திகதி வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற வடக்கு- கிழக்கு மாகாண உடற்பயிற்சிப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இதன்மூலம் அந்த அணி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட வீராங்கனைகள் அதிபர், உபஅதிபர், ஆரம்பப்பிரிவு அதிபர், பயிற்றுநர் ஆகியோரைப் படத்தில் காணலாம். (த-90)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 695 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 12-7-2005 | செல்லுப்படியாகும் தொடர் இல. 4593171-4609080 |

வெற்றி இலக்கங்கள்

**31 36 46 50**

லக்கினம் கும்பம்

ஜக்பொட் பரிசு
ரூபா.17,79,550/-
வெல்லப்பட்டுள்ளது
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 352,789 | 10/- | 35,27,890/- |
| 2.இலக்கங்கள் | 32,409 | 20/- | 6,48,180/- |
| 1.இல லக்கினம் | 32,195 | 30/- | 9,65,850/- |
| 2.இல லக்கினம் | 2,976 | 100/- | 2,97,600/- |
| 3.இலக்கங்கள் | 858 | 500/- | 4,29,000/- |
| 3.இல லக்கினம் | 80 | 5,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 17,79,550/- | 17,79,550/- |
| | | மொத்தம் | 83,48,070/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 94,00,320/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 10,00,000/- தொடர் இல. 5551762 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 ஜுலை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 4593194-1-38 |
| அம்பாறை | 4596066-5-46 |
| கொழும்பு | 4598257-3-42 |
| பதுளை | 4607533-4-94 |
| மாத்தறை | 4595094-0-43 |


# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிமனை எழுவைதீவில் திறப்பு

ஊர்காவற்றுறை,ஜூலை14

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உப பணிமனை ஒன்று அண்மையில் எழுவைதீவுப் பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் நிக்கொட் நிறுவனத்தினால் அறுபத்தைந்து லட்சம் ரூபா செலவில் பாரிய அபிவிருத்திப் பணிகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக மேற்கொள்ளப் படவுள்ளன.

இப்பணிகளை இலகுவாகவும் விரைவாகவும் முன்னெடுப்பதற்கு எதுவாகவே இந்த உப பணிமனை திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றும்- பொதுமக்கள் தமது கருத்துகள், முறைப்பாடுகள் என்பவற்றை மேற்படி உப பணிமனையில் உள்ள அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரமுடியும் என்றும்- தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்பு திட்டத்தின் கீழே இப்பிரதேசம் அபிவிருத்தி செய்வதற்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளது. இங்கு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் குறித்த பல்வேறு செயலமர்வுகள் பலமாதங்களுக்கு முன்னர் இங்கு நடைபெற்றிருந்தன.

இதில் இப்பிரதேச வாழ் மக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டு தமது தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் தெரிவித்திருந்தனர். இவற்றை மையமாக வைத்தே அபிவிருத்திப் பணிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இன்னும் ஒரு சில வாரங்களில் இருபத்தி ஏழு லட்சம் ரூபா செலவில் பொதுமண்டபம் ஒன்று நிர்மாணிப்பதற்கான வேலையும் இறங்கு துறையில் பயணிகள் தங்குமடம் ஒன்று நிர்மானிப்பதற்கான வேலையும் ஆரம்பமாகவுள்ளன.

வடக்கு-கிழக்கு பகுதிகள் கடல் கோளினால் தாக்கப்பட்டதனாலேயே இவ்வேலை ஆரம்பிப்பதில் தாமதம் எற்பட்டு வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

(த-16)

## பொதுக் கூட்டம்

ஊர்காவற்றுறைப் பிரதேசசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு சங்கத் தலைவர் சு.சுந்தரேசன் தலைமையில் பிரதேச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முகாமையாளர் க.கனகசபை பிரதம விருந்தினராகவும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் முன்னாள் செயலாளர்களான கு.கணேசலிங்கம், சி.சந்திரசேகரம் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்றுச் சென்ற எம்.இ. பேணாட், மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற ச.இராசநாயகம், க.பாலசுப்பிரமணியம், ஞா. சோதிலிங்கம் வே. யோகராசா, ப. சுரேசன், க.சௌந்தர்ராஜன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(த-16)

## ஆசிரியருக்கான முக்கிய சந்திப்பு

தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி நிலையம் மூலம் பயிற்சியை முடித்து இதுவரை சான்றிதழ் கிடைக்காத யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கான முக்கிய சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.உலகநாதன் தலைமையில் நடைபெறும்.

இச் சந்திப்பிற்கு வரும் ஆசிரியர்கள் இறுதிப் பரீட்சை முடிவுப் படிவங்களின் பிரதியையும் 300 ரூபா பணமும் கொண்டுவருமாறு தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (த-202)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் கோபாலபிள்ளை



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது 57, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் கோபாலபிள்ளை (முன்னாள் காங்கேசன் துறை பிரபல வர்த்தகர்) 09-07-2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-07-2005) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை, சுவாமியார் வீதி, 57ஆம் இலக்க இல்லத்தில் இருந்து பிற்பகல் 4.30 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*57, சுவாமியார் வீதி,* (37712) (24-15-14) தகவல்:
*கொழும்புத்துறை.* கோ.கி.ஆனந்தராஜா (மகன்).

### திருமதி வெங்கட்ராமன் சுந்தராம்பாள்

காலஞ்சென்ற சுப்ரமண்ய ஐயர் - பகீரதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் ரங்கசாமி ஐயர், சுப்புலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாகிய வெங்கட்ராமன் சுந்தராம்பாள் நேற்று (13-07-2005) புதன்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்வேலி வடக்கு, ரங்கசாமி ஐயர் இல்லத்தில் இன்று (14-07-2005) வியாழக்கிழமை நடைபெற்று, தகனத்திற்காக பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*நீர்வேலி வடக்கு,* தகவல்:
*நீர்வேலி.* (37712) (24-15-45) ரங்கசாமி ஐயர் (சகோதரன்).

### சிவகுரு கந்தவனம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு கந்தவனம் அவர்கள் 11-07-2005 திங்கட்கிழமை நுணாவிலில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சடாசிவம், நல்லையா, கணபதிப்பிள்ளை, செல்லம்மா, இராசையா மற்றும் தில்லைநாயகி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் தங்கவேலு ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவகுருநாதன், சித ம்பரநாதன், காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சிவபாலநாதன், சிவராசேஸ்வரி, சிவயோகநாதன், காலஞ்சென்ற சிவகுணநாதன் மற்றும் சிவயோகேஸ்வரி, சிவலோகேஸ்வரி, சிவனேஸ்வரி,சிவசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரா, விஜயகுமாரி (பவா), இந்திராணி, காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் நாமகள், சிவயோகர், ராம், செந்தில்நாதன் ஆகியோரின் மாமனும் கிவித்திரா, செந்தூரன், தர்ஷன், ரஜிப்பிரியா, சுபாஜினி, கீர்த்திகா, சாருஜன், நிர்திக்கா, சிந்துஜா, வர்ணிகா, சங்கவி, பாரதி, நிரோஜன், மாதங்கி, இளங்கோ, சேரன், அபர்ன்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (14-07-2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நுணாவிலில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"ரூஸ்தான்"* தகவல்: க.சிவகுருநாதன்
*ரூந்தித்துறை வீதி,* (நியூலங்கா ரேடேல் பிறைவேட் லிமிட்ட், யாழ்ப்பாணம்),
*நுணாவில் மேற்கு,* திருமதி ச.சிவகுருநாதன்
*சாவகச்சேரி.* (37710) (24-15-45) (யாழ்ப்பாணம், பிரதேச செயலகம்).


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 - 03 - 1925 |  | 01 - 07 - 1998 |

### திருமதி நல்லதம்பி புனிதவதி

ஆண்டுகள் ஏழு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலமாட்டாது.

- கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*மானிப்பாய் வீதி,*
*உரும்பிராய்.* (37707) (24-15-45)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் சுத்திகரிப்பு வேலைக்கு ஆள்கள் தேவை

எமது வைத்தியசாலைக்குச் சுத்திகரிப்பு வேலைக்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர்.

1. சுத்திகரிப்பு வேலையாள்கள் - 50
2. லான்ட் மாஸ்ரர் ஓட்டுநர் - 1
3. மேற்பார்வையாளர் - 2

*நேர்முகப் பரீட்சைக்கு 16.07.2005 சனிக்கிழமை காலை 9 மணிக்குச் சமுகமளிக்கவும்.*

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
153, பொன்னாலை வீதி,
மானிப்பாய்.
(37708) (21-15-45-24)


## வடமாகாணத்தில் முதன் முதலாக அறிமுகப்படுத்தியுள்ளோம்!



**Indoor - out door Large format Digital Printing**

### 6 அடி முதல் 300 அடி வரை

* வியாபார நிறுவனங்களுக்கான பெயர்ப்பலகைகள், பனர்கள்,
* ஆலயங்களுக்கான திரைச்சீலைகள்
* வாகனங்களுக்கான அலங்கரிப்புகள் (ஸ்ரிக்கர்)
* சினிமாத் திரையரங்குகளுக்கான போஸ்ரர்கள்
* திருமணப் பந்தல்களுக்கான வர்ண அலங்கரிப்புகள்
* ஸ்ரூடியோக்களுக்கான அலங்கரிப்புகள்



Out Put media
- Sticker paper
- Flex paper
- Hoted paper
- Backlit flim
- Photo paper
- Vinyl paper

**MOORTHY LAZER DIGITAL COLOUR LAB**

Jaffna Road, Manipay. T.P.: 021 222 2884

Stanley Road, Jaffna. T.P.: 0714168475



நற்கருணைக் கண்காட்சியை கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ நாடாவெட்டி திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். யாழ். ஆயர் அதிவண. தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகையும் இந்தப்படத்தில் உள்ளார். கண்காட்சியைப் பார்வையிட வந்த மாணவ,மாணவிகளை அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.
*(படங்கள் :- தமிழினியன்)*

# கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்ரோய் நேற்று யாழ் வந்தார்

யாழ்ப்பாணம்,ஜூன்14

கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ நேற்று யாழ்.வருகைதந்தார்.

யாழ்.மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றுவரும் நற்கருணை மாநாட்டில் கலந்துகொள்ளவும், நற்கருணைக் கண்காட்சியை திறந்துவைக்கவுமே கிறிஸ்தவ விவகார அமைச்சர் யாழ்.வந்தார் எனக் கூறப்பட்டது.

நற்கருணைக் கண்காட்சியை மங்களபூர்வமாக ஆரம்பித்துவைத்த அமைச்சர் அங்கு விசேட உரை ஒன்றையும் நிகழ்த்தினார். இந்தக் கண்காட்சியில் யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உட்பட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(எ-190)


## கலையகம் - ஆவரங்கால்
SPOKEN ENGLISH
by
**BRITTO**
(37727)(38-12-16)
ஆரம்பம் - 15.07.2005 (வெள்ளி 11 A.m.)
திங்கள், புதன் 11 A.m.

## விற்பனைக்கு
சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சீம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.
(சி-42048)(38-12-16) **யாழ்.போன் சொப்**
10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி,
(திரி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை
எமது வர்த்தக நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை. உறவினர் அல்லாத ஒருவருடைய சிபார்சுக் கடிதத்துடன் நேரில் வரவும்.
தொடர்பு:
**வெங்கடேஸ்வரா**
இல.125 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-42049)(38-12-16)

## படிவம்
புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவம் உண்டு.
விண்ணப்ப முடிவு திகதி: 10.08.2005
**S. L. A. S விண்ணப்பப்படிவமும் உண்டு.**
விண்ணப்ப முடிவு திகதி: 15.08.2005
(அரச விளம்பரத்திற்கு அமைய அச்சிடப்பெற்ற படிவங்கள் மட்டுமே எம்மிடம் உண்டு.)
Bharathi Pathippakam
Off - Set & letter Press Printers
430, K. K. S. Road, Jaffna.

## பொருளியற்கல்லூரி
(யாழ்நகர்)
புதிய பிரிவு II ஆரம்பம்
மிகக்குறுகிய காலத்தில் எழுத, வாசிக்க, பேச...
**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
Lectured By:
Mr.K.Nishanthan (Dip.in Eng.)
ஆரம்பம்: 19.07.2005 - செவ்வாய் At 3 p.m. (N.T)
செவ.,வியா. - At 3 p.m. (பு.நே.)
பின்வரும் மூன்று இடங்களிலும் பிரிவு I ஆரம்பித்துவிட்டது.
- பொருளியற்கல்லூரி -யாழ்நகர் -சனி, ஞாயிறு - 3 p.m.
- பொருளியற்கல்லூரி - இணுவில் - சனி, ஞாயிறு 2p.m.
- பாரதி - சித்தன்கேணி -சனி, ஞாயிறு -4.15p.m.

குறிப்பு: ❖ கணனி மூலமாக இலகுமுறையில் பேச்சுப் பயிற்சிகள் முழுமையாக வழங்கப்படும்.
❖ குறுகிய காலத்தில் பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்படுவதுடன் அச்சடித்த பாடக்குறிப்புகளும் வழங்கப்படும்.
❖ O/L, A/L பரீட்சைகளுக்கான தயார்ப்படுத்தலும் செய்யப்படும். (37709)(38-12-16)

## வேலைவாய்ப்பு
எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் ஆடை அகத்திற்கு தையல் வேலையில் அனுபவமுள்ள பெண் ஊழியர்கள் உடன் தேவை.
விண்ணப்பம் அனுப்பவேண்டிய விலாசம்.
**தியாகி அறக்கொடை நிறுவனம்,**
**527, நாவலர் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.** (37729)(38-12-16)


## கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலைஆசிரியர் **கி.சுதாகரன்**
அவர்களின் மாமியார்
**செல்வி பத்மாசனி கணபதிப்பிள்ளை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம், அனலைதீவு.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(37230)(38-12-16)

## கண்ணீர் அஞ்சலி
எமது அணியைச் சேர்ந்த மாணவன் ம.துஷாந்தன
அவர்களின் அன்புத் தந்தை
**முத்துராஜா மரியநாயகம்**
அவர்கள் 12.07.2005 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.
28 ஆம் அணி மாணவர்கள்
மருத்துவபீடம். யாழ்.பல்கலைக்கழகம்.
(37726)(38-12-16)

## 90ஆம் நாள் நினைவுகளில்...



மண்ணில் 05 - 05 - 1979
விண்ணில் 16 - 04 - 2005

**அமரர் தேவராசா உதயகுமார்**
(விதானை வீதி, வசந்தபுரம், இருபாலை கிழக்கு)

நல்லவை நடக்கவேண்டும்
நானிலம் சிறக்கவேண்டும்
அல்லவை போக்கவேண்டும்
அரியவை தேட வேண்டும்
சொல்பவை செய்யவேண்டும்
சோர்வது அகற்றவேண்டும்
வல்லவை தந்த உதய - என்
குமாரனே சாந்தி! சாந்தி!!

V.H. லேன், இருபாலை கிழக்கு, வசந்தபுரம்.
தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள்.
(37723)(38-12-16)

## B.Th. பட்டமளிப்பு விழா
## பிற்போடப்பட்டுள்ளது
இன்றைய உதயன் 12 ஆம் பக்கத்தில் வெளியான B.Th. பட்டமளிப்பு விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.
அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள்.
*கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, சுன்னாகம்.*
(37721)(38-12-16)

## ஆதாரங் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்
கடந்த 24.06.2005 வெள்ளிக்கிழமை மாலை 4.20 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் 780 வழிப்பாதை மினிபஸ்ஸில் தங்கநகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் வந்து ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.
*முகவரி:*
தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம்.
ஊர்காவற்றுறை. (37724)(38-12-16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்துரை செல்லையா**
(சீனட்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை)
தோற்றம் 18 - 07 -1928
மறைவு 15 - 06 - 2005

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து அமரராகிவிட்டீர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
15.07.2005 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வல்வெட்டி.
T.P:- 0779134785
செ.உலகநாதன் மற்றும் பிள்ளைகள்.
(37714)(38-12-16)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ
## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



விஸ்வப் பிரம்ம குல திலகர்
அமரர் **கந்தையா துரையப்பா**
அன்னை மடியில் 07 - 04 -1942
ஆண்டவன் அழைப்பில் 14 - 06 - 2005
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டதும் ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தோருக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டோருக்கும் இரங்கல் செய்தி அனுப்பி வைத்தோருக்கும் இன்னும் வெவ்வேறு பல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (14.07.2005) வியாழக்கிழமை முற்பகலில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
நன்றி!
கோயிலாக்கண்டி மேற்கு, வேலன்பிராய்.
குடும்பத்தினர்.
(37716)(38-12-16)


## நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
**6'.2''** (ரீல்ஸ்)
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
வெகுவிரைவில் அர்ஜுன், சினேகா நடித்த **சின்னா**
(சி-43363)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தியின்
(ரீல்ஸ்) **சூர்யா**
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே).
அடுத்த வெளியீடு **உள்ளம் கேட்குமே**
(C/11380(29-16)

## ராஜா யாழ்ப்பாணம்
*கடைசி வாரம்*
**சந்திரமுகி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
நாளை முதல் **கற்க கசடற**
(C/11381)(12-17)


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில் 13 - 08 - 1964
இறைவன் பாதாரவிந்தத்தில் 07 - 07 - 2003

அமரர்
**தர்மலிங்கம் ஜெகதீஸ்வரன்**
(பார ஊர்தி உரிமையாளர்) திதி - 14.07.2005

எங்கள் குல விளக்கே எழிலார் எம் செல்வ மைந்தா
முன்னைத் தவப்பயனால் வந்துதித்த முதல் முத்தே
உன்னைச் சுமந்திருந்த தோள் வலி தான் தீர முன்னே
மின்னலென மறைந்து அகவை ஈராண்டெனினும்
என்றென்றும் எம் இதயத்தில் வாழ்ந்திடுவீர்!

சிலம்புப் புளியடி, சங்கானை.
தர்மலிங்கம் குடும்பத்தினர்.
(37715)(38-12-16)

# ஜே.வி.பியுடன் மீண்டும் கூட்டுசேருகின்ற எண்ணத்தை அடியோடு விட்டுவிடுங்கள்

## அமைச்சர்களுக்குக் கண்டிப்புடன் ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு,ஜலை14

ஜே.வி.பியுடன் மீண்டும் கூட்டுவைக்கும் எண்ணம் அல்லது முயற்சி இருந்தால் அதை அடியோடு கைவிட்டுவிடுங்கள்.

- இப்படித் தமது சிரேஷ்ட அமைச்சர்களுக்குக் கண்டிப்புடன் ஆலோசனை கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்றிரவு கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துக் கலந்துரையாடியபோதே கண்டிப்புடன் கூடிய தமது இந்த ஆலோசனையை - கட்டளையை- சிரேஷ்ட அமைச்சர்களுக்குத் தெரியப்படுத்தினார் ஜனாதிபதி சந்திரிகா என அறியவந்தது.

ஐ.தே.கட்சி நேற்றுமுன்தினம் நடத்திய மக்கள் சக்தி பேரணியின் இறுதிநாள் நிகழ்வில் லட்சக்கணக்கில் மக்கள் திரண்டமை ஆளும் கட்சி தரப்பினரின் வயிற்றில் புளியைக் கரைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அரசு நாடாளுமன்றத்தில் சிறுபான்மை அரசாக இருப்பதால்தான் ஐ.தே.கட்சி இவ்வளவு வீறுகொண்டு குதிக்கின்றது எனக் கருதும் அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் ஜே.வி.பியுடன் சமாளித்து உறவை மறுசீரமைத்து மீண்டும் ஜே.வி.பியை அரசுக்குள் கொண்டு வருவதன் மூலம் அரசின் பெரும்பான்மையை மீள உறுதிப்படுத்தலாம் என்றும் அதனைப் பயன்படுத்தி ஐ.தே.கட்சிக்கு ஒரு பாடம் படிப்பிக்கலாம் என்றும் கருதுகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

ஆனால், இந்த முயற்சி ஜனாதிபதிக்கு எரிச்சலைத் தந்திருப்பதாகத் தெரிகின்றது. அதனால், இத்தகைய எத்தனத்தை நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கரித்துக் கொட்டினாராம் ஜனாதிபதி என்றும் தெரியவந்தது.

ஜே.வி.பியுடன் பட்டதுபோதும் மீண்டும் அவர்கள் அரசுக்குள் வந்தால் எமது அரசின் ஏனைய- எஞ்சிய - நல்ல திட்டங்களைக் கூட செய்யவிடமாட்டார்கள். குழப்புவார்கள். அதைச் செய், இதைச் செய், அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்றெல்லாம் எமக்கு நிபந்தனை விதிப்பார்கள்.

ஒன்றையும் செய்யவிடாமல் எம்மைக் குழப்பிவிட்டுத் தம் வேலையைப் பார்த்துக் கொண்டு எமது காலையும் திடீரென வாரி விட்டுப் போய்விடுவார்கள். அத்தகையவர்களை மீண்டும் சேர்த்து இயங்குவதைத் தனிப்பட்ட முறையிலும் நான் விரும்பவில்லை. அவர்களை மீளச் சேர்ப்பது எஞ்சிய அரசுக் கூட்டமைப்புக்கும் வீழ்ச்சியையே தரும்.

சிறுபான்மை அரசு என்றாலும் இதை நாம் திறமையாகக் கொண்டு நடத்த முடியும். எனவே, அமைச்சர்கள் அதைக் கவனத்திற்கொண்டு நன்குதிட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் நமது வேலைத் திட்டத்தை வெற்றிகரமாகச் செய்து மக்கள் ஆதரவைப் பெருக்க முடியும். ஆகையால், ஜே.வி.பியுடன் கூட்டுச்சேரும் வேலையை விட்டுவிட்டு மக்களுக்கான சேவையில் அமைச்சர்கள் முழு முனைப்புடன் ஈடுபடவேண்டும் என உறுதியாகத் தெரிவித்தார் ஜனாதிபதி எனத் தெரியவந்தது. (எ-க)

## காலக்கெடு இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் வழங்கிய 14 நாள் காலக்கெடு என்பது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள இருவாரக்காலக்கெடுவுக்குச் சமனானதா என்பதை முக்கியமாக நாம் அவரிடம் கேட்டோம்.

அது, அந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கொடுக்கப்பட்ட காலக்கெடுதான் என்பதை அவர் கண்டிப்புடன் உறுதிப்படுத்தினார்.

பத்திரிகை அறிவிப்புகளின்படி அரசு இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டிருக்கிறது.

ஒன்று - ஒருவரும் தங்களுக்கு (அரசுக்கு) காலக்கெடு கொடுக்கமுடியாது என்பது.

மற்றது - புலிகளின் போக்குவரத்துக்கு மாதத்துக்கு ஒரு தடவைதான் அரசு ஏற்பாடு செய்யமுடியும் என்ற கடுமையான ஒழுங்கு.

இவை அரசுத் தரப்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பு. யாரும் தமக்குக் காலக்கெடு விதிக்கமுடியாது எனக் கூறும் அரசுத்தரப்பு, போராளிகளின் போக்குவரத்துக்கு மாதம் ஒரு தடவை மட்டும் என்று கெடுவிதிக்கிறது.

தமது பொறுப்பாளர்கள், போராளிகள், தளபதிகள் கொல்லப்படுவதையும், அலுவலகங்கள் தாக்கப்படுவதையும் புலிகள் இனி மேலும் கைகட்டிப் பொறுத்துக்கொண்டு பார்த்திருப்பார்கள் என நான் நம்பவில்லை. பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. அவர்கள் இந்த விடயத்தில் மிகக் கண்டிப்பாக இருக்கின்றார்கள். தாங்கள் இவ்விடயத்தில் கடுமையாக இருப்பதைத் தமிழ்ச்செல்வன் எம்முடன் உரையாடும்போது தெளிவாக - அறுதியிட்டு - தெரிவித்தார்.

எனவே - வருங்காலத்தில் அவர்களின் நடவடிக்கை மிகக் கடுமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை - என்றார் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.

(எ-க)

## ஜனாதிபதி மாளிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மாளிகை மற்றும் அதை அண்டிய பிரதேசங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பு கோட்டையில் முக்கிய இடங்களில் அமைந்துள்ள கட்டடங்கள் இந்த அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அடக்கப்பட்டுள்ளன. ஹில்டன் ஹோட்டல், கலதாரி ஹோட்டல், உலகவர்த்தக நிலையம், ரெலிகொம் நிறுவனம், ஆஸ்திரேலிய கட்டடம், செலின்கோ தலைமையகம், இன்டர் கொன்டினல் ஹோட்டல் என அனைத்து இடங்களிலும் பணியாற்றுபவர்களின் விவரங்கள், அசையும் சொத்து, அசையாச் சொத்துக்கள், அவற்றின் உரிமையாளர்களின் விவரங்கள் என்பவையே திரட்டப்படவுள்ளன. எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் பொலீஸார் இந்த விவரங்களைத் திரட்டும் பணியில் ஈடுபடுவர் எனத் தெரியவருகிறது.

இப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடும் எவரையும் எந்த நேரத்திலும் கைதுசெய்ய பாதுகாப்புப் படையினரால் முடியும். அதேவேளை, இப்பகுதியில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதும் முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-க-190)

## பொதுக்கட்டமைப்பு ஊடாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, விஜித ஹேரத், விமல் ரட்னாயக்க, அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் கலந்துகொண்ட இந்தச் செய்தியாளர் மாநாட்டில் விமல் வீரவன்ஸ கூறியதாவது:-

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக இடைக் காலத் தடையுத்தரவுகோரி நாம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணையில் நாளை வெள்ளிக்கிழமை எமக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றோம். தீர்ப்பு என்னவாக இருந்தாலும், பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக மக்கள் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென்பதை கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

பொதுக்கட்டமைப்பிற்கு நிதி வழங்கப்படுதல் மற்றும் நிதிப்பரிமாற்றம் தொடர்பில் திறைசேரியின் செயலாளரும், உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் பீற்றர் ஹெரல்ட்டும் உயர்நீதிமன்றத்திற்கு கடிதமொன்றை சமர்ப்பித்துள்ளனர். திறைசேரி ஊடாக நிதி பகிரப்படுமானால், உலக வங்கி ஏன் இந்த விடயத்தில்தலையிடவேண்டும்? நிதிப்பகிர்வு தொடர்பான விவகாரத்தில் அமைச்சரவை அனுமதிக்கு அப்பால் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டுமென்பதை நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம். பொதுக்கட்டமைப்பிற்கு நேரடியாக நிதியுதவி வழங்கப்படமாட்டா தென அமெரிக்கா கூறுகிறது. ஆனால், அதே நாட்டைத் தளமாகக் கொண்ட உலக வங்கி வேறொரு நிலைப்பாட்டில் இருக்கிறது. ஏன் இந்த இரட்டைக் கொள்கை என்று நாம் வினவுகிறோம்.

பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி வழங்குவதைத் தடுக்கும் சட்டமூலமொன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது அதன் படி பார்த்தால், பொதுக்கட்டமைப்பின் ஊடாகப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுவதும் தவறானது என்றார் விமல் வீரவன்ஸ. (எ-க)

## வியாவிலில் வாள்வெட்டு மூவர் படுகாயம்

காரைநகர் வியாவில் பகுதியில் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற மோதலில் சிக்கி மூவர் வாள்வெட்டுக்கும் அலவாங்குத் தாக்குதலுக்கும் இலக்காகினர்.

அதேஇடத்தைச் சேர்ந்த சகோதரர்களான சின்னையா சற்குணராஜா (வயது 40), சின்னையா கேதீஸ்வரன் (வயது 33) இவர்களது சகோதரியின் மகனான கல்வன்தாழ்வைச் சேர்ந்த இராமலிங்கம் மதுரகவி (வயது 30) ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்தவர்களாவர்.

காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (எ-78)

## ஜனாதிபதித் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தே.கட்சியின் செயற்குழுக்கள் மூலம் மக்களுக்கு உண்மை நிலையை விளக்கவுள்ளோம்

ஐ.தே.கட்சியில் 'மக்கள் எழுச்சி' பாதயாத்திரையின் பலம் என்னவென்பதை உணர்த்தியுள்ளோம். விரைவில் எமது அடுத்தகட்ட நடவடிக்கையை ஆரம்பிப்போம். ஐ.தே.கட்சி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும்வரை தனது அரசியல் எதிர்ப்பு நடவடிக்கைகளை இடைவிடாது நடத்திக்கொண்டேயிருக்கும். இந்த அரசின் ஜனநாயக விரோதப் போக்குக்கு முடிவுகட்டவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. மக்கள் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பக் கோரி எம்முடன் அணிதிரண்டிருக்கிறார்கள். விரைவில் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவோம். - என்றார் அவர். (எ-க-190)

## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் இரத்தினம்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இரத்தினம் நேற்று (13.07.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சபிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (37732)

தகவல்:
ச.மாயவன் (பேரன்)

### திருமதி விஜயமலர் பாலசிங்கம்



நந்தாவில் ஒழுங்கை, தாவடி கொக்குவிலைச் சேர்ந்த திருமதி விஜயமலர் பாலசிங்கம் அவர்கள் நேற்று (13.07.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாலசிங்கத்தின் (ஓய்வூதியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தையல்முத்து தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான அழகக்கோன் - நவரத்தினம் ஆகியோரின் மருமகளும் குலதேவி (சுவிஸ்), சாந்தினி, அபிராமி (பிரான்ஸ்), பானுமதி (பிரதேச செயலகம்,நல்லூர்), காலஞ்சென்ற முரளிகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தாயும் தர்மகுலசிங்கம் (சுவிஸ்), ஞானசீலன் (மக்கள் வங்கி, பிராந்திய அலுவலகம் - யாழ்ப்பாணம்), மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் வாகீசன், காருண்யா, இந்துஜா, அபிகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சறோஜா, ராதா (கொழும்பு), கணேசலிங்கம் (லண்டன்), சண்முகாநந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், துரைசிங்கம் மற்றும் இரத்தினகோபால் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (37731)

மலர் அகம்
நந்தாவில் ஒழுங்கை, தாவடி.

தகவல்:
S.A. பாலசிங்கம் (கணவன்).

### சுப்பிரமணியம் அருணகிரிநாதன் (ராசன்)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ராசன் என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் அருணகிரிநாதன் 12.07.2005 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் அகாலமரணமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - நாகேஸ்வரியின் அன்பு மகனும் சிவபாலன், மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் வாசுகியின் அன்புக் கணவரும் குகேந்தினி, திவ்யா, விதுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் தனஞ்செயன் (லண்டன்), கருணாநிதி (கரன் - துர்க்கா மில் உரிமையாளர், அ னைக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2005) வியாழக்கிழமை 11.30 மணியளவில் அவரின் பொற்பதி வீதியில் அமைந்திருக்கும் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில். (சி-42050)

தகவல்:
குடும்பத்தினர்.


வினைல்ஸ் சுன்னாகம்
Physics Paper Class
ஆரம்பம்:-16.07.2005-சனி, ஞாயிறு (5-6.30P.m.)
2007-Mechanics-sat&sun.- 5p.m.
2006-Electricity-Tue&Thu.6.30-7.30 a.m.
ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
BY.P.Sivakumar(B.sc., Dip in Ed.)(37718)

SCC
கணனிப் பயிற்சி நெறிகளுக்கு 50% சலுகைக் கட்டணம்
பிரிவு III ஆரம்பம் 16,18.07.2005
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811

ஆங்கில நேரடி வகுப்பு - 2005
3 மாதத்தில் ஆங்கிலத்தில் திறமையாக கதைக்க உத்தரவாதம்.
அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் இப்பாடநெறியில் இணைந்து கொள்ளலாம்.
பாடச்சலுகைக் கட்டணம் ரூ.3000/=
பயிற்சி நெறியில் இணையும் போது ரூ.1000/= க்கான புத்தகங்களும், பயிற்சி நெறி முடிவில் ரூ.2000/= க்கான புத்தகங்களும், CDயும் இலவசம்.
SAAMSTECH
841, HOSPITAL RD, JAFFNA. PH: 021-4591571

புதிய யூனிவேசல் அக்கடமி
A/L PAPER CLASS
தமிழ்:- குழந்தை | அளவையியல்:- கமல்
புவியியல்:-பாபு | இ.நா:-ஜெயக்குமார்
ஆரம்பம்:-15.07.2005 வெள்ளி
(அனுமதிகள் முன்கூட்டியே பெறப்படல் வேண்டும்) (37667)

தரம்:5 புலமைப் பரிசில் பரீட்சை
திரு.கணேசலிங்கம் (பிரதம மதிப்பீட்டாளர்) அவர்களின் விசேட புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை
இம்முறை எதிர்பார்க்கப்படும் வினாக்கள் அடங்கியது
15.07.2005 (வெள்ளி)-பி.ப.4.15 மணிக்கு
வினாப்பத்திரம் தேவையானோர் இன்று (14.07.2005) தொடர்புகொள்ளவும்
நல்லூர் சயன்ஸ் அக்கடமி (நல்லூர் கோயில் முன்பாக)
தரம்-4முதல் O/L வரை 2ஆம் தவணைப் பரீட்சை வினாப்பத்திரம் பெறலாம். (37694)

S.L.A.S
போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு
ஆரம்பம்:- 16.07.2005 சனி-11.00a.m.
D.C.C.A
மக்கள் வங்கி அருகில் ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம். (37662)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.